Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி -10 | 26-07-2003 | சனிக்கிழமை | ஓசை 158

நலிவுற்றோர் நலன் வாழ்வுத் திட்டம்
நலிவுற்றோருக்கு உதவுவோம்
கொடிவாரம்
01.07.2003 - 21.07.2003
சமுதாய முன்னேற்ற நிலையம்,
தலைமைச் செயலகம், கிளிநொச்சி.

# இளநிலை அதிகாரிகள் பயிற்சி நிறைவு நாள் விழாவில் தேசியத்தலைவர் தேர்ச்சி பெற்றோருக்கு சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பு







இளநிலை அதிகாரிகள் பயிற்சி நிறைவு நாள் விழாவில் தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் கலந்து கொண்டு விசேட பெறுபேறு பெற்றவர்களுக்கு பரிசில்களையும் தேர்ச்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவித்துள்ளார். நேற்று வன்னியில் உள்ள புலிகளின் பாசறையில் இடம்பெற்ற நிகழ்வின் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறிய ஒரு தொகுதி இளநிலை அதிகாரிகளில் விசேட பெறுபேறுகளைப் பெற்ற இளநிலை அதிகாரிகளுக்கு பரிசில்களையும் தேர்ச்சி பெற்ற அதிகாரிகளுக்கு சான்றிதழ்களையும் வழங்கி அவர்களை தமிழீழத் தேசியத்தலைவர் கௌரவித்ததோடு கருத்துரையும் வழங்கியுள்ளார். மேற்படி நிகழ்வில் கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை, வடபோர்முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன், கேணல் பானு, கேணல் சொர்ணம், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கேணல் விதுஷா, கேணல் துர்க்கா, பொறுப்பாளர், போராளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். நிகழ்வின் இறுதியில் பயிற்சியை முடித்துக் கொண்ட அதிகாரிகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# இடைக்கால நிர்வாகசபை யோசனைகளை இரகசியமாக வைத்திருக்க முடியாது

## பிரதமர் ரணிலின் கோரிக்கையை ஏற்க சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா மறுப்பு

**வடக்கு- கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபை யோசனைகளை இரகசியமாக வைக்குமாறு பிரதமர் விடுத்திருந்த கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சனாதிபதி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவுக்கு அறிவித்துள்ளார் என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

விடுதலைப்புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை யோசனைகளுக்கும் சனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட யோசனைகளுக்கும் இடையில் முக்கிய வேறுபாடுகள் உள்ளதைக் கருத்திற்கொண்டு சனாதிபதி இந்த முடிவுக்கு வந்துள்ளதாகவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது குறித்து மேலும் வடக்கு கிழக்கின் பாதுகாப்பு காணி, வருமானம், பொலிஸ் ஆகியவற்றின் அதிகாரங்கள் தொடர்பாக முரண்பட்ட வகையில் விடுதலைப் புலிகளுக்கும் சனாதிபதிக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மிகவும் பாரதூரமான வேறுபாடுகள் இருப்பதைக் கருத்திற்கொண்டு நாட்டின் இறைமையை பாதுகாக்கும் நோக்கில் நிர்வாக யோச

(08ஆம் பக்கம் பார்க்க)

-சமாதான நடவடிக்கை, பொருளாதார ஒப்பந்தம்-

## இந்திய, சிறிலங்கா அதிகாரிகள் புதுடில்லியில் சந்தித்துப் பேச்சு

(லண்டன்)

சிறிலங்காவின் வெளியுறவுத்துறை அமைச்சின் செயலர் நிகால் ரொட்றிகோ நேற்று புதுடில்லிக்குச் சென்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு அதிகாரிகளைச் சந்தித்து இலங்கை சமாதான நடவடிக்கை, இலங்கைக் கடற்பகுதியில் இந்திய மீனவர்கள் மீன்பிடித்தல், இலங்கை-இந்திய பொருளாதார, கூட்டு ஒப்பந்தம் போன்ற விடயங்கள் குறித்து ஆராய்ந்துள்ளனர். மீனவர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையைப் பொறுத்தவரையில் உறுதியான வகையிலும் அதேசமயம் மனிதத்தன்மையுடன்

(08ம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

முல்லை. மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தவறுதலான துப்பாக்கிச் சூட்டின் போது போராளி ஒருவர் சாவடைந்துள்ளார். வீரவேங்கை புரட்சி மாறன் (செட்டிபாளையம் அன்ரன் திலீபன், வேளாங்கண்ணி மாதா கோவில்

(08ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் விழிப்புணர்வு கொண்ட எம் இனத்தின் விடுதலை வேட்கையை எவரும் அழிக்க முடியாது

## -யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பருதி

சிறந்த தலைமைத்துவம், வலிமைமிக்க தமிழர் சேனை, அரசியல் விழிப்புணர்வு கொண்ட எம் தமிழினத்தின் விடுதலை வேட்கையை எவரும் அழிக்க முடியாது' என யாழ்மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பருதி தெரிவித்தார். களுத்துறைச் சிறையில் குட்டிமணி, தங்கத்துரை உட்பட 53 பேர் படுகொலை செய்யப்பட்ட 20 ஆம் ஆண்டு நினைவு தினக் கூட்டம் நல்லூர் ஆலய முன்றலில் நேற்று மாலை நடைபெற்றது.

இக் கூட்டத்தில் சிறப்புரை ஆற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது தமிழினம் ஒரு குரலில் கோரிநிற்கும் இடைக்கால நிர்வாகம் உட்பட்ட தமது இயல்பு வாழ்வுக் கோரிக்கையையும் அதன்பால் அவர்களது வாழ்வுரிமைகளையும் திருப்திப் படுத்தும் அளவில் அரசாங்கத்தினது இடைக்கால நிர்வாகத் திட்டம் அமையாவிட்டால் மக்களின் தீர்மானமும் எம்மாவீரர்களது இலட்சியமும் நிறைவேறும் வகையில் எம் வாழ்வுரிமையைத் தடுக்க எவருக்கும்

(08ம் பக்கம் பார்க்க)

## பிரித்தானிய தூதுவராலயம் விசா வழங்க புதிய நடைமுறை

சிறிலங்காவில் உள்ள பிரித்தானிய தூதுவராலயம் விசா வழங்குவதற்கான புதிய நடைமுறைகளை அறிவித்து வருகின்றது. புதிதாக விண்ணப்பிப்பவர்கள் தங்கள் குருதியின் விபரம் உடல் அடையாள உடலியல் பொருத்த விபரங்கள் என பலவற்றையும் இணைத்து விண்ணப்பிக்க வேண்டும் என கேட்கப்பட்டுள்ளனர். கொழும்பில் உள்ள பிரித்

(08 ஆம் பக்கம் பார்க்க)

-கப்டன் அன்பரசி உட்பட-

## மூன்று மாவீரர் நினைவு நாள் நாளை தரவையில் அனுஷ்டிப்பு

கப்டன் அன்பரசி உட்பட மூன்று மாவீரர்களின் நினைவாக நாளை விடுதலைப்புலிகளின் தரவை மீளகம் படைத்தளத்தில் விசேட நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. ஆரம்ப நிகழ்வாக மட்டு- அம்பாறை, மாவட்ட விசேட தளபதி கேணல் கருணா அவர்கள். அன்பரசி படையணியின் பாசறை. வாத்திய அணியினரால் வரவேற்கப்படவுள்ளார்.

(08ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### ஆடி அமாவாசை தீர்த்த உற்சவம்

புதுமுறிப்பு கற்பகவிநாயகர் ஆலயத்தில் வழமைபோல் ஆடி அமாவாசை தீர்த்த உற்சவம் 28.07.2003 திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும். பிதுர்க் கடன் செய்வதற்கு உரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. ஆலய பரிபாலனசபை. (3569)

## தவறிவிட்டது

இராசையா கலைச்செல்வன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை புளியங்குளத்திற்கும் முகமாலைக்கும் இடையில் தவறிவிட்டது. தயவு செய்து இதைக் கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தகவல்: தயானந்தன் ஆசிரியர், கிளி.இந்துக்கல்லூரி. (3578)

## துவிச்சக்கர வண்டி காவல்துறையால் மீட்பு

பாண்டியன்குளம் பகுதியில் களவு போன துவிச்சக்கர வண்டியொன்று மல்லாவி காவல் பணிமனையினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் மல்லாவி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார்.

## தீர்த்த உற்சவம்

மாயவனூர் திருக்குழல் நன் மாதுமை சமேத கணபதீச்சரர் சிவன் கோயில் வருடாந்ததீர்த்த உற்சவ விழாவும் ஆடிப்பூர விழாவும் நடைபெறவுள்ளது. வரும் திங்கட்கிழமை காலை ஆறு மணிக்குப் பூசைகள் ஆரம்பமாகி சிவன் மாதுமை அம்பாள் சகிதம் புறப்பட்டு காலை 9.00 மணிக்கு மம்மில் குளத்தில் தீர்த்த உற்சவம் நடைபெறும். தொடர்ந்து வரும் வெள்ளிக்கிழமை அன்று வருடாந்த ஆடிப்பூர விழாவும் பகல் 12 மணிக்கு ஆரம்பமாகிப் பூசைகள்நடைபெறும். (12)

# வடக்கு—கிழக்கு மாகாணத்திலுள்ள முன்பள்ளி அபிவிருத்தி ஆய்வுப்பட்டறை

(அலுவலக செய்தியாளர்)

வடகிழக்கில் உள்ள சகல முன்பள்ளிகளினதும் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு நேற்று முன்தினம் அண்மையில் கிளிநொச்சி சிரான் அலுவலகத்தில் ஆய்வுப் பட்டறை இடம்பெற்றது.

முன்பள்ளிகளை அபிவிருத்தி செய்வதற்கு முன்பள்ளி அபிவிருத்தி இணைப்பாளர்களுக்கு பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான முன்னோடி ஆய்வுப்பட்டறை 18.07.2003 திருகோணமலையில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முன்பள்ளிக்கல்வியில்தொடர்புடைய 50 பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக மாகாண கல்வி அமைச்சு செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தலைமையில் ஆரம்பமாகியது. இரண்டாவது நிகழ்வு சிரான் செயலகப் பணிப்பாளர் இறேனியஸ் செல்வின் தலைமையில் இடம் பெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரதும், போரூட் நிறுவனத்தினதும் ஆதரவுடன் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம் நடாத்திய இப் பட்டறையை வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி. ஜெயா தம்பையா நெறிப்படுத்தினார். கிளிநொச்சி அரசாங்க அதிபர் தி.இராசநாயகம், தமிழீழ கல்விக்கழக வன்னிப் பிராந்திய பொறுப்பாளர் ஞானம், தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் இனியவன் உட்பட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதிகள்,முன்பள்ளி சார்ந்த பிரமுகர்கள் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.

வடமாகாணத்தில் உள்ள சகல கல்வி வலயங்களினதும் முன்பள்ளி. ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், உள்ளூர், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய கட்டமைப்புக்கு உள்ளடங்கிய பெற்றார், இணைப்பாளர்கள் ஆகியோர் ஆய்வுப் பட்டறையில் கலந்து கொண்டு பயிற்சி நெறிக்கான பாடத் தலைப்புக்களை வரையறுப்பதில் பெரும் பங்காற்றினர். தமிழர் புனர்வாழ்வுக் கழக திட்டப் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி பட்டறையின் நோக்கம், குறிக்கோள், முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய செயற்பாடுகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அளித்து வரும் ஆதரவு குறித்து விளக்கிக் கூறினார்.

போரூட் பிரதிநிதி திருமதி. மாலினி இப் பயிற்சித் திட்டத்தில் போரூட் நிறுவனம் இணைந்ததன் நோக்கத்தை தெளிவுபடுத்தினார். யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் த.கலாமணி, திருமதி.கோகிலா மகேந்திரன் ஆகியோர் ஆய்வுப் பட்டறையின் குழு நிலையின் சமர்ப்பணம் குறித்துத் தமது அபிப்பிராயங்களை தெரியப்படுத்தினர். அனைத்து முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையங்களினதும் ஒருங்கிணைப்பாளர் கணேசலிங்கம் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத் தோற்றம், திட்ட நோக்கம், செயற்பாடுகள் பற்றி கருத்துரை வழங்கினார். வடகிழக்கு ரீதியாக பயிற்சி பெறும் 103 தமிழ் மொழி மூலமான பயிலுனர்களும், 17 சிங்கள மொழி மூலமான பயிலுனர்களும் பயன்பெற உள்ளனர். யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் பயிற்சி வகுப்புகள் நடைபெறும். 21 நாள் இடம்பெறவுள்ள பயிற்சிக்கான ஆய்வுப் பட்டறையில் கலந்து கொண்ட அனைவரும், வடகிழக்கிலுள்ள சகல முன்பள்ளிகளிலும் ஒரே விதமான கல்விச்செயற்பாடுகள் நடைபெறுவதை உறுதி செய்வதுடன் சகல முன்பள்ளிகளிலும் பெற்றாரினதும், சமூகத்தினதும் பங்களிப்பை வலுப்படுத்தி முன்பள்ளிகள் அபிவிருத்தி அடைவதற்கான முயற்சிகளிலும் முழுமையாக ஈடுபடவுள்ளதாக உறுதி செய்தனர். (லோ)

## அடிப்படை வசதிகளற்று ஐயன்கன் குளம் பாடசாலை

(அலுவலக செய்தியாளர்)

அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில் துணுக்காய் ஐயன்கன் குளம் பாடசாலை இயங்கிவருகின்றது.

மேற்படி துணுக்காய் கல்விவலயத்தின் கீழ் இயங்கிவரும் ஐயன்கன்குளம் அ.த.க. பாடசாலையில் 204 மாணவர்கள் கல்வி கற்றுவருவதோடு ஒன்பது ஆசிரியர்கள் தேவையானவிடத்து ஐந்து ஆசிரியர்கள் மட்டுமே கடமையில் உள்ளனர்.

கிணறு, ஆசிரியர் விடுதி, விளையாட்டு மைதானம் என்பன இல்லாத நிலையில் மேற்படி பாடசாலை பெரும் சிரமங்களை எதிர்கொண்டு இயங்கிவருகின்றது. (பா)

## கண்டெடுப்பு

சிங்காரம் செல்லையா என்பவருடைய தேசிய அடையாள அட்டை வட்டக்கச்சிப் பிரதேசத்தில் காவல் துறையினரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் கிளிநொச்சியிலுள்ள ஈழநாதம் பணிமனையில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

## முக்கிய அறிவித்தல்

கரைச்சிப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பல இடங்களில் சட்டவிரோதமாக மணல் அள்ளும் நடவடிக்கைகள் அதிகரித்து வருவதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இதனால் எமது பிரிவு சூழலுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் என்பதனை மிகவும் கவலையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். இத்தகைய பேரழிவைத் தடுப்பதற்காகக் கீழ்க்காணும் இரு இடங்களில் மாத்திரம் உரிய அனுமதியினைப்பெற்று மணல் அள்ளுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது.

**01. பேராறு [நீவில்-கண்ணகைபுரம் பகுதி]**
**02. பன்னங்கண்டி- ஆற்றுப்பகுதி**

இவ்விரு இடங்களைத் தவிர்ந்த ஏனைய இடங்களில் மணல் ஏற்றுவது சட்ட விரோதமானதாகும். சட்ட விரோதமாக மணல் அள்ளுவோருக்கு ரூ.1,000/= அபராதமாக விதிப்பதுடன் மணலும் பறிமுதல் செய்யப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ்வறிவித்தல் மாவட்ட சூழல் அபிவிருத்திச்சட்டத் தீர்மானத்திற்கமைவானதாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

(சி-8443)

**விசேட ஆணையாளர்,**
**கரைச்சிப் பிரதேச சபை.**

## சாவு அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை நவரத்தினம்

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் புதுக்குடியிருப்பு 2ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நவரத்தினம் என்பவர் (குமரன் கபே, குமரன்வெதுப்பக உரிமையாளர்) 25.07.2003 அன்று காலமானார். அன்னார், திலகவதியின் அன்புக் கணவரும் தயாநந்தி, சஜீவன், சஜிந்தன், சஜீகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் அருளானந்தம், செல்லத்துரை நவரத்தினம் (சுவிஸ்), கமலாதேவி, விமலாதேவிஆகியோரின் அன்புச் சகோதரரும் அன்னலட்சுமி, லலிதாராணி நடேசபிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 27.07.2003 ஞாயிறு காலை 10மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று புதுக்குடியிருப்பு இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக கொண்டு செல்லப்படும். இவ்வறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**பிள்ளையார் புடைவை மாளிகை**
புதுக்குடியிருப்பு (சி-7767)

தகவல்:
**நடேசபிள்ளை (மைத்துனர்)**

### மரியாம்பிள்ளை பீற்றர்

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் முத்தையன்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை பீற்றர் (மனேஜர்) 24-07-2003ல் இறைபதமடைந்துவிட்டார்.

இவர் ஜோர்ஜ் தேவலோக நாயகியின் அன்புக் கணவரும், திருமதி மரியாம்பிள்ளை ஆரோக்கியத்தின் அன்புச் சகோதரரும், திருமதி சவரிமுத்து ஜோர்ஜ்மேரியின் மருமகனும், அமலதாஸ் (தபால் ஊழியர் ஒட்டுசுட்டான்), மேரிறோசலின், மரியதாஸ் ஆகியோரின் தந்தையும், மேரி மசிந்தா, ஜெயநாடன் (இலைப்பாறிய நீர்ப்பாசன திணைக்கள உதவியாளர்), றேமன் தவச்செல்வி (ஆசிரியர் ப.க பாடசாலை) ஆகியோரின் மாமனாரும், அமல்ராஜ், கர்சன், மரின் ராஜ் ஜெல்சன், லொசிர்டன், அமலோஜினி, கலின் புஷ்பா, தனுசிகன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 25-07-2003 நேற்று வற்றாப்பளை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்-அமலதாஸ் பீற்றர் (மகன்)*
*தபாலகம், ஒட்டுசுட்டான்.*

(3579)




கிளிநொச்சியில்

# மாபெரும் கண்காட்சியும் விற்பனையும்

## பூங்கனிச் சோலை

**இன்றும் நாளையும் (சனி,ஞாயிறு)**
**காலை 8.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை**

எமது தாபகத்தில் எங்குமே பார்த்திராத புதிய மெருகுடன் பளிங்குக் கற்களினால் புதிதாக வடிவமைக்கப்பட்ட தேர், தண்ணீர்ச் சிந்திகள் மற்றும் பல.

உங்கள் சிறார்கள் பார்த்து மகிழ ஓர் அரிய சந்தர்ப்பம்.

**உயிருள்ள மிருகங்கள், மான்கள், குரங்கு, மயில், பறவையினங்கள், செயற்கை மிருகங்களான யானை, புலி, டைனோசர், கழுகு மற்றும்**

## புதிய இனப் பூங்கன்றுகள்

யூக்கோலியா, பௌண்ட்பிறால், பாக்கொய்கிச், வதனியா,10 இனச் சைபிறஸ், வெள்கட், நோலட், அப்ரிகட், மண்டேரியா, சோண்காரி, சிங்லவெதர், தைர்ச்சா, கோடிற் இந்தியா ஆகியவையும் காட்சிப்படுத்தப்பட உள்ளன.

சிங்கப்பூர் காட்சிகளுக்கு நிகராக அமைந்துள்ள இந்த இயற்கை எழில் நிறைந்த காட்சிகளை கண்டு மகிழ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முடமாவடி
இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி.
T. P.021-222 29716
E Mail:- Poongavirsolai @ yahoo. Com

(சி-8311)

# அமெ. புலனாய்வு நிறுவனங்கள் விழிப்புடன் இருந்திருப்பின் செப்ரெம்பர் தாக்குதல்களைத் தவிர்த்திருக்கலாம்

## - அமெரிக்க காங்கிரசின் ஆய்வறிக்கை தெரிவிப்பு

**அமெரிக்காவின் புலனாய்வு நிறுவனங்கள் விழிப்புடன் செயற்பட்டிருந்தால் செப்ரெம்பர் 11ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை தவிர்த்திருக்கலாம் என அந்நாட்டின் காங்கிரஸ் சபை கூறியுள்ளது.**

எவ்.பி.ஐ., சி.ஐ.ஏ. ஆகிய புலனாய்வு நிறுவனங்களுக்கு கிடைத்த பல தகவல்களைத் திரட்டியிருந்தால் அமெரிக்காவைத் தாக்கும் ஒசாமா பின் லேடனின் திட்டத்தைக் கண்டு பிடித்து தடுத்திருக்கக் கூடிய வாய்ப்புகள் அதிகமாக இருந்திருக்குமென காங்கிரஸ் சபை விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இச்சபையில் புலனாய்வுக்குழுவிற்கு தலைமை வகிக்கும் மேதகொக் என்ற அதிகாரி இச்சதித் திட்டம் பற்றிய சில விடயங்கள் இன்னும் இரகசியமாக உள்ளதாகக் கூறியுள்ளார். பிரதிநிதிகள் சபை செனற் புலனாய்வுக் குழுக்கள் என்பன கடந்த வருடம் நடத்திய கூட்டான ஆய்வின் முடிவை 900 பக்க அறிக்கையில் சமர்ப்பித்து அவர் உரையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



சதாமின் புதல்வர்கள் கொல்லப்பட்டதாக வெள்ளைமாளிகையிலிருந்து அறிவிக்கும் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ்

## - சதாமின் புதல்வர்களின் மரண விவகாரம் -

# சடலங்களின் புகைப்படங்களில் ஈராக்கியருக்கு நம்பிக்கையில்லை

சதாமின் மகன்களான உதய், குவாஸி ஆகிய இருவரது பிரேதங்களை வெளிப்படுத்தும் புகைப்படங்கள் ஈராக்கிய மக்களை திருப்திப்படுத்தவில்லையென தெரிய வருகின்றது.

சடலங்களை தமக்கு காண்பித்தால் மட்டுமே இவர்கள் இறந்தமையை நம்ப முடியுமென மக்கள் வாதாடுகின்றனர். அமெரிக்க இராணுவம் பிளாஸ்ரிக் திரைகளில் மறைக்கப்பட்ட பிரேதங்களின் புகைப்படங்கள் வெளியிடப்பட்டது.

இவற்றை நம்ப முடியாதென அம்மக்கள் வாதாடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஈராக்கில் தாக்குதல் நடத்திக் கொல்லப்பட்டவர்கள் சதாம் ஹுசைனின் மகன்களே என நிரூபிக்கும் முயற்சியில் அவர்களது புகைப்படங்களை வெளியிட்டுள்ளது அமெரிக்கா.

ஈராக்கை கைப்பற்றிய அமெரிக்கப் படைகள் சதாம் ஹுசைனின் மகன்களான உதய், குவாஸி பற்றிய விபரங்கள் அளிப்பவர்களுக்குப் பரிசுத் தொகை வழங்கப்படும் என அறிவித்திருந்தது.

இந்நிலையில், குவாஸி, உதய் இருவரும் மோஷோல் நகரில் ஒரு மாளிகையில் தங்கியிருப்பதாகக் கடந்த செவ்வாயன்று அமெரிக்கத் துருப்புக்களுக்கு தகவல் கிடைத்தாகவும். இதையடுத்து அமெரிக்க இராணுவம் ஏவுகணைகளை வீசித் தாக்குதல்களை நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதில் சதாம் ஹுசைனின் மகன்கள் இருவரும் கொல்லப்பட்டதாக அறிவித்தது. கொல்லப்பட்டவர்களின் சடலங்களின் புகைப்படங்களும் வெளியிடப்படுள்ளன.

இப்படங்களில் மொட்டைத் தலையுடன் காணப்படுவது உதய் என்றும் அடுத்த நபர் குவாஸி என்றும் தெரிவித்துள்ளது.

குண்டுகளால் துழைக்கப்பட்டு காணப்பட்ட இரு சடலங்களையும், சதாம் ஹுசைனின் முன்னாள் உதவியாளரும், துணைப் பிரதமர் தாரிக் அஸிசும் மற்றும் அவரது உதவியாளர் அமேக் முகமத் ஆகியோரும் நேரில் வரவழைக்கப்பட்டு இறந்தவர்கள் உதய், குவாஸி என்று உறுதிப்படுத்தப்பட்டதாகச் செய்திகள் கூறியுள்ளன.




சதாமின் புதல்வர்களின் சடலங்களின் படங்களும், முன்னர் எடுக்கப்பட்ட படங்களும்

# காஷ்மீர் மாநில எல்லைப் பகுதியில் 5 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

## - இந்திய இராணுவம் அறிவிப்பு

காஷ்மீர் மாநிலம் அக்கூர் அருகே ஊடுருவிய 05 தீவிரவாதிகளை எல்லைப் பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

காஷ்மீரிலுள்ள அக்கூர் இராணுவ முகாமருகே அண்மையில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் ஒரு பிரிகேடியர் உள்ளிட்ட 08 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவ அதிர்ச்சி நீங்குவதற்குள் நேற்று முன்தினம் இரவு ஊடுருவிய 05 காஷ்மீர் தீவிரவாதிகளை எல்லைப் பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர் என இந்திய இராணுவம் அறிவித்துள்ளது.

இச்சம்பவத்தின் போது தீவிரவாதிகள் ஓடமுயற்சித்த போது படையினர் சுட்டுக் கொன்றதாகவும் படையினர் தரப்பில் சேதம் எதுவுமில்லை என்றும் எல்லைப் பாதுகாப்புப் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேநேரம், எல்லைக்கு அப்பாலிருந்தும் தீவிரவாதிகள் சுட்டதாகவும், படையினரும் திருப்பிச் சுட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன.

# விபத்தில் 8பேர் பலி

கோவையருகே நேற்று அதிகாலை பேருந்தும் லொறியும் மோதிக் கொண்டதில் 8 பேர் உயிரிழந்துள்ளனர். 5 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கோவையையடுத்த கன்னடம் தாராபுரம் வீதியில் மதுரையிலிருந்து வந்து கொண்டிருந்த பேருந்தும், எதிரில் வந்த லொறியும் எதிர்பாராத விதமாக மோதியதில் 8 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 05 பேர் படுகாயம் அடைந்தனர்.

## -சதாமின் மகன்மாரின் கொலைக்கு-

# பழிவாங்கப் போவதாக ஆதரவுக்குழு எச்சரிக்கை

அமெரிக்கப் படைகளால் கொல்லப்பட்ட சதாம் ஹுசைனின் மகன்கள் கொல்லப்பட்டதாகப் புகைப்படங்கள் வெளிப்பட்டதையடுத்து, பழிக்குப்பழி வாங்கப்போவதாக ஈராக் தீவிர வாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் இந்த எச்சரிக்கையையடுத்து, அமெரிக்க இராணுவ வாகனம் தகர்க்கப்பட்டு 3 அமெரிக்க இராணுவம் பலியாகியுள்ளமை பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கை தொலைக்காட்சியில் ஒலிபரப்பான சிறிது நேரத்தில், பாக்தாத்தில் அமெரிக்க இராணுவ வாகனத்தை தீவிரவாதிகள் குண்டு வைத்துத் தகர்த்துள்ளனர்.

இது ஈராக்கில் பெரும் பரபரப்பையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

## -டெஹல்கா போலி ஆயுதபேரம்-

# இந்திய மாநிலங்களவையில் திங்கட்கிழமை விவாதம்

டெஹல்கா போலி ஆயுத பேரம் தொடர்பாக மாநிலங்களவையில் எதிர்வரும் திங்கட்கிழமை விவாதம் நடத்த அரசு ஒப்புக் கொண்டுள்ளதையடுத்து, நாடாளுமன்றத் தேக்கநிலை முடிவுக்கு வரலாம் என்று தெரிய வருகின்றது.

போலி ஆயுத பேரம் குறித்த வழக்கில், முறையான விசாரணைகள் முடிவதற்கு முன்பு பாதுகாப்புத் துறையமைச்சர் ஜார்ச் பெர்னாண்டசை மத்திய அமைச்சரவையில் மீண்டும் சேர்த்துக்கொண்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த ஒன்றரையாண்டு காலமாக நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சர் ஜார்ச் பெர்னாண்டஸ் உரையை எதிர்க்கட்சிகள் புறக்கணித்து வந்தன.

நடப்பு நாடாளுமன்றத் தொடரிலும் இந்நிலை தொடர்ந்ததால் ஏற்படக் கூடிய இரு அவைகளின் தேக்க நிலையை முடிவுக்குக் கொண்டுவர நேற்று முன்தினம் மக்களவைத் தலைவர் மனோகர் ஜோஷி, மாநிலங்களவை தலைவர் வைரோசிங் ஆகியோர் கூடி விவாதித்தனர்.

இந்தக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் சுஷ்மா சிவராஜ்,

டெஹல்கா தொடர்பாக இரு அவைகளில் ஏதாவது ஒரு அவையில் விவாதம் நடத்த அரசு ஒப்புக் கொண்டுள்ளது என்று கூறியுள்ளார்.

## -நீதிமன்றத் தீர்ப்பு அடிப்படையில்-

# 1,76000 தமிழக ஊழியர் வேலைக்குத் திரும்பினர்

தமிழகத்தில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டமைக்காகப்பணி நீக்கம் செய்யப்பட்ட 1,76000 ஊழியர்கள், உச்ச நீதிமன்றத தீர்ப்பையடுத்து மீண்டும் நேற்றுப் பணிக்குத் திரும்பியுள்ளனர்.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதற்காக நிபந்தனையற்ற மன்னிப்புக் கடிதத்தில் கையெழுத்திட்ட பின்னர், அவர்களை பணிக்குச் சேர்த்துக் கொள்ள, அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இருப்பினும் இந்தப் போராட்டம் தொடர்பாக சிறைக்குச் சென்றவர்கள் மற்றும் வன்முறையில் ஈடுபட்டதாகக் கூறி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவர்கள் ஆகியோரை பணியில் மீண்டும் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.


டில்லி சென்றிருந்த நிதியமைச்சர் சி.பொன்னய்யன் தலைமையில் உயர்மட்டக் குழு நேற்று முன்தினம் முதலமைச்சரைச் சந்தித்து, உச்ச நீதிமன்றத் தீர்ப்புப் பற்றி விவாதித்துள்ளார்.

இதனடிப்படையில் ஊழியர்களை மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்வதற்கான கடிதம் தயாரிக்கப்பட்டது.

இக்கடிதம் நேற்று முன்தினமிரவே தலைமைச் செயலர் லட்சுமி பிரானின் தலைமையில் நடைபெற்ற அனைத்துத்துறைச் செயலர்கள், துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பணி நீக்கம் செய்யப்பட்ட அரச ஊழியர்கள் நிபந்தனையற்ற மன்னிப்புக் கோருவதுடன், வரும் காலத்தில் இது போன்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபடமாட்டேன் என உறுதி கூறி கடிதத்தில் கையெழுத்திட்ட பின்னரே, வரவுப் பதிவேட்டில் கையெழுத்திட அனுமதிக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# வை.கோ உட்பட 9 பேர் மீது குற்றச்சாட்டுக்கள் பதிவு



பொடோ சட்டத்தில் கைது செய்யப்பட்ட வை.கோ உள்ளிட்ட 09 பேர் பூந்தமல்லி பொடோ நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளதுடன் குற்றச்சாட்டுக்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மதுரையருகே திருமாங்கலத்தில் விடுதலைப்புலிகளை ஆதரித்துப் •பொதுக் கூட்டத்தில் பேசியதாக, திரு. வை.கோ உள்ளிட்ட அவரது கட்சியைச் சேர்ந்த 08 பேர் பொடோ சட்டத்தில் கைது செய்யப்பட்டு வேலூர் உள்ளிட்ட பல்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

இவர்கள் மீதான வழக்கு பூந்தமல்லி பொடோ நீதிமன்றத்தில் விசாரணைக்குட்பட்டு வருகின்றது.

இந்நிலையில் திரு. வை.கோ உள்ளிட்ட 09 பேரும் நேற்று தனி நீதிபதி ராஜேந்திரன் முன்பு ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

# கலிலியோ

இரண்டு வெவ்வேறு எடையுள்ள இரண்டு பொருள்களை சம உயரத்திலிருந்து போட்டால் அதிக கனமானது முதலில் கீழே விழும், கனம் குறைவானது சற்று தாமதித்து கீழே விழும் என்ற செய்தியை கலிலியோ படித்தார். இந்தக் கருத்தைச் சொல்லியிருந்தவர் அரிஸ்டாடில் என்ற மேதை.

அரிஸ்டாடில் கருத்து தவறானது என்று கலிலியோ கண்டார். அதை நிரூபிக்கத் தீர்மானித்தார்.

கலிலியோ நூறு இறாத்தல் நிறையுள்ள ஓர் இரும்புக் குண்டையும் ஒரு இறாத்தல் நிறையுள்ள ஓர் இரும்புக்குண்டையும் எடுத்துக் கொண்டு நூற்றி எண்பது அடி உயரக் கோபுரத்தின் ஏழாவது தளத்திற் குச் சென்றார். அங்கிருந்து இரண்டு குண்டுகளையும் ஒரே சமயத்தில் கீழே போட்டார்.

பார்த்த எல்லோரும் ஆச்சரியத் துடன் கலிலியோவையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தனர். பல ஆண்டு நம்பிக்கையைத் தூள் தூளக்கியது கலிலியோவின் கருத்து. இரண்டு குண்டுகளுமே ஒரே சமயத்தில் கீழே விழுந்தன.

கலிலியோவுக்குப் பதினேழு வய தாகும் போது, அவர் மாதா கோவிலுக்குப் பிரார்த்தனை செய்யச் சென்றார். அப்போது மாலை மங்கிக் கொண்டு வந்தது. மாதா கோயிலில் இருள் சூழ ஆரம்பித்தது. மெழுகு வர்த்தி ஏற்றுபவன் மெழுகுவர்த் தியைக் கொழுத்தும் கம்பைத் தூக்கிக் கொண்டு வந்தார். மெழுகு வர்த்தி விளக்குகள் விதானத்தில் சங்கிலியில் தொங்கிக்கொண்டிருந்தன. மெழுகு வர்த்தியை கொளுத்துபவன் கொளுத்திவிட்டு நகர்ந்ததும் தொங்கும் ஒவ்வொரு விளக்கும். இப்படியும் அப்படியும் ஆடத் தொடங்கின. கலிலியோ உன்னிப்பாக அதைக் கவனித்தார். விளக்கு முறையாக இப்படியும் அப்படியுமாக ஆடிற்று. அந்த நாளில் நேரத்தைக் கணக்கிடக் கடிகாரம் இருக்கவில்லை. ஆனால் மருத்துவத்துறை மாணவனான கலிலியோவுக்கு நாடித் துடிப்பைப்பற்றிப் நன்றாகத் தெரியும். நாடித்துடிப்புடன் விளக்கு ஆடுவதை ஒப்பிட்டுப்பார்த்தார். பிற்காலத்தில் இந்த அடிப்படையில் தான் நாடித்துடிப்பை கணக்கிடும் கருவி உருவாக்கப்பட்டது. கடிகாரத்தின் பெண்டுலமும் இந்த முறையில் அபிவிருத்தியடைந்தது தான்.

கலிலியோ தூரதிருஷ்டிக் கண் ணாடியை முதன் முதலாக உரு வாக்கினார். அவரால் தூரதிருஷ் டிக் கண்ணாடி கண்டுபிடிக்கப்பட்டது தெரிந்த அரசன் கிங் அரோயா அவரை அழைத்தான். அரச சபையே கலிலியோ எடுத்து வந் திருந்த தூரதிருஷ்டிக் கண்ணாடி யைக்கண்டு ஆச்சரியமடைந்தது.

அதுவரை பூமியை சூரியன் சுற்றுவதாகக் கருதப்பட்டு வந்தது. அது தவறு, சூரியனை மற்ற கோள்களைப் போல பூமியும் சுற்றுகிறது என்று கண்டறிந்து கூறினார். 1616ஆம் ஆண்டு சூரியனே அண் டத்தின் நடுநாயகன் என்பதை முதன் முதலாக நிரூபித்தார்.

உலகத்தின் இயற்கைத் தன்மை குறித்து கலிலியோ இரண்டு புத்த கங்கள் எழுதினார். அவற்றில் தாம் கண்ட உண்மைகளைக் குறிப்பிட்டிருந்தார். இது மத விரோதமாக மதத் தலைவர்களுக்குத் தோன்றியது. அவரை சபைக்கு அழைத்தார்கள். புத்தகத்தில் கூறப்பட்டுள் ளவை தவறானவை என்று ஒப்புக் கொண்டால் மன்னிப்பதாகக் கூறினார்கள்.

பவீ தூண்டுதலின் பேரில் தவறு என்று கூற கலிலியோ எழுந்தார். ஆனால் அதற்கு அவருடைய மன சாட்சி இடம் தரவில்லை. அது புரட்சி செய்யத் தொடங்கிற்று. அவர் தரையைப் பார்த்த வண்ணம் "பூமிதான் சூரியனைச் சுற்றுகிறது" என்று தடைப்பட்ட குரலில் சொன் னார்.

மத நம்பிக்கையைத் தவறாக கூறியதற்காக 1637 இல் கலிலியோ சிறையில் அடைக்கப்பட்டார். அவருக்குக் கண்பார்வை போயிற்று. 1642இல் மாமேதை கலிலியோ காலமானார்.

# முதுமையில் தோன்றும் அசைமார் வியாதி

1907இல் முற்பகுதியில் அலா ஜின்ட் அசைமார் எனும் ஜேர்மன் மனவியல் அறிஞர் முதுமையில் சிலருக்கு ஏற்படும் மிகக் கொடிய நோயைக் கண்டாராய்ந்தார்.

அவரது பெயரிலேயே அது "அசைமார் வியாதி"என அழைக்கப் படுகின்றது. இந்த வியாதியுடைய வர்களுக்கு ஞாபகம் முழுவதுமாய் அறுந்து போய் விடுகின்றது.

சிந்திக்கும் திறன் முழுமையாய்க் குறைந்து விடுகின்றது. அசைமர் வியாதியைத் தீர்க்க ஏறக்குறைய இல்லை. அல்லது மிகக் குறைவு என்றே கூறப்படுகின்றது.

வயது மிக முதிர்ந்தவர்கள் என்று இல்லாமல், மத்திம வயதுடையோரையும் இவ்வியாதி தாக்குவதாகக் கண்டறிந்தார் அசைமர்.

மூளைக் கட்டிகளுக்கு இருக்கும் அதே அறிகுறிகள் இவ்வியாதிக்கு இருப்பதால், சில நேரம் இவ்வியாதியைக் கண்டறிவதே மிகச் சிரமமாகின்றது.

சில நேரங்களில் நோயால் மனிதர் இறந்து போகும் வரையில் கூட இந்த வியாதியை இனம் கண்டு கொள்ளமுடிவதில்லை.

மூளையின் மத்திய காட்டெஸ் பகுதியில் ஏற்படும் நியூரோன்களின் அழிவு இந்த நோய்க்குக் காரணமாகின்றது.

அசைமார் வியாதி வந்தவர்களின் மூளையில் நியூரோ ரான்ஸ் மீற்றர் எனப்படும் இரசாயனத் தொடர்பகங்கள் வேலை செய்யாமல் போவதால் ஞாபகசக்தி அற்றுப் போகின்றது.

ஞாபகச் சங்கிலி தாறுமாறாக அறுந்து போவதே அசைமார் வியாதியின் மிகப் பிரதானமான அறிகுறியாகச் சொல்லப்படுகின்றது.

நமது இரத்தத்திலிருக்கும் இருவகை ஓமோன்களான கொரஸ்ரைல், மலூற்றனன் என்பனவே நியூரோன்களின் செயற்பாட்டிற்கும் அதன் மூலம் ஞாபகங்களின் கோர்வைக்கும் காரணமாகின்றன. அசைமர் வியாதி வருகையில் இந்த ஓமோன்கள் சுரக்காமல் போகின்றன. அல்லது குறைவாகச் சுரக்கின்றன.

இந்த ஓமோன்களின் அளவை அளப்பதன் மூலம் அளவு குறைந்திருக்கின்றது என அறிய வருவதன் மூலம் இந்நோயை அறிந்து, தடுக்க முடியும்.

ஞாபக சக்திக்கு அடித்தளமிடும் நியூரோ ரான்ஸ் மீற்றர்கள் எனும் இரசாயனத் தொடர்பகங்கள் குறைந்து போவதைத் தடுக்கும் முறைகள் கண்டு பிடிப்பதற்கான ஆய்வுகள் நாளும் நடைபெறுகின்றன.

இதன் மிகப்பெரிய சிக்கல் என்னவென்றால். இதை ஆராய்பவர்களுக்குக் கூட இந்த வியாதி வந்து விடுகின்றது.


இப்போது சில புதியவகை மருந்துகள் கண்டு பிடிப்பதில் வெற்றி கண்டுள்ளார்கள்.

இதுவரையான ஆராய்ச்சிகளுக்குப் பலன் கிடைத்திருக்கின்றன என்பதும், இந்த ஆராய்ச்சிகளின் விளைவாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் மருந்துகள் அசைமர் எனும் வியாதிக்குத் தீர்வாக, மருந்தாக அமையும் என்றாலும் கூட, இதிலும் சில பல சிக்கல்கள் இன்றும் தொடர்கின்றன.

இந்த வியாதியைப் பொறுத்த வரை இந்த வியாதிக்கு மருந்து இருந்தாலும் கூட, இது ஏன் வருகின்றது எனும் வினாவுக்கான பதில் இதுவரையிலும் கிடைக்கவில்லை உண்மை நிலை என ஆய்வுகள் கூறியுள்ளன.

# 2400 மடங்கு பெரிதாக்கினால்...

இப்படத்தை பார்த்தவுடன் இது ஒரு செம்மண்கல் குகை ஒன்றின் நுழைவாயில் என்றுதான் தோன்றும். ஆனால் உண்மை அதுவல்ல. இது எமது கைவிரல் நுனியில் அமைந்திருக்கும் கண்ணுக்குத் தெரியாத சிறு துவாரம். நிக்சன் எனும் படப்பிடிப்பாளர் 2400 தடவைகள் பெரிதாக்கிய பின்னரே இத்தோற்றம் கிடைத்தது. இதில் சிறு சிறு உருண்டைகளாகத் தெரிபவை ஒருவகை சரும பக்டீரியாக்கள்.



# விவேகமற்ற வேகம்... விபத்து



உலகளாவிய ரீதியில் பெருகி வரும் வீதி விபத்துகளுக்கு மிதமிஞ்சிய வேகமே காரணம் என வீதிப் போக்குவரத்தைக் கண்காணிக்கும் அதிகாரிகள் கூறிவருகின்றனர். குறிப்பாக இளைஞர்கள் வேகமாக வாகனங்களைச் செலுத்தி பாரிய விபத்துகளுக்குள் சிக்கி உயிரிழப்பிற்கும், உடல் உறுப்புகளின் இழப்பிற்கும் உள்ளாகின்றனர். இளைஞர்கள் வீதிகளில் கார் பந்தயங்களைப் போன்று போட்டியிட்டு வாகனங்களை மக்கள் போக்குவரத்துச் செய்யும் வீதிகளில் ஓட்டிச் செல்வது பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

இதனைக் கட்டுப்படுத்த கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் விபத்துக்கள் தொடர்கின்றன.

படத்தில் வேகக்கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்த வாகனங்களின் வேகத்தை அளவிடும் நவீன ராடருடன் போக்குவரத்து அதிகாரி ஒருவர்.


# எவரெஸ்ருக்கு புதிய ஆபத்து

உலகிலேயே அதிக உயரம் கொண்ட எவரெஸ்ற் மலைச் சிகரத்துக்கு புதிய ஆபத்து வந்துள்ளது. அதாவது இமயமலையிலுள்ள பனிக் கட்டிகள் உருகுவது ஆண்டுக்கு ஆண்டு உருகுவது அதிகரித்து வருவதே, இந்த ஆபத்துக்குக் காரணமாகும்.

1953ஆம் ஆண்டு எவரெஸ்ற் மலைச் சிகரத்தை டென்சிங் ஹிலாரி ஆகிய இருவரும் அடைந்த போது இருந்த சூழ்நிலை இப்போது இல்லை. அவர்கள் மலைச் சிகரத்துக்குச் சென்ற பாதையில் காணப்பட்ட ஏரிகள், நீர்க்குட்டைகள் பனிக்கட்டிகளாகவே காணப்பட்டன.

பூமியில் அதிகரித்த வெப்பநிலை காரணமாக அவை இப்போது நீராக உள்ளன. ஆண்டு தோறும் எவரெஸ்டிற்கு ஏறும் மனிதர் விட்டுச் செல்லும் கழிவுகள், குப்பைகளும் தற்போதைய இந்நிலைக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

# விவேகானந்தர் —— பாறை



தமிழ்நாடு கன்னியாகுமாரியிலுள்ள இந்தப் பாறை சுவாமி விவேகானந்தர் பாறை என்று அழைக்கப்படுகின்றது. இதற்குக் காரணம் 1892ஆம் ஆண்டு டிசம்பர் 25ஆம் திகதி இப்பாறைக்கு விவேகானந்தர் வந்தார் என்றும், இங்கே தியானத்தில் அமர்ந்து, தனது தாய் நாட்டிற்கும் இந்துசமய மறுமலர்ச்சிக்கும் தன்னை அர்ப்பணிக்க முடிவு செய்தவர். இதன் பின்னரே சிக்காகோ சர்வசமய மாநாட்டில் கலந்து கொண்டு பேருரையாற்றினார். இந்துசமய மறுமலர்ச்சி யுகத்தை ஆரம்பித்தார் என்றும் கூறப்படுகின்றது.

விவேகானந்தர் தவமியற்றிய பாறை என்பதால் "விவேகானந்தர் பாறை" என அழைக்கப்பட்ட இக்கடல் பாறையில் விவேகானந்தர் நினைவு மண்டபத்தை முன்னாள் இந்திய சனாதிபதி வி.வி. கிரி திறந்து வைத்தார்.

- கடற்கரையில் இருந்த வள்ளங்களுக்கு தீவைப்பு -

# பொதுமக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தால் போக்குவரத்து 5 மணிநேரம் ஸ்தம்பிதம்

**காலி தெவட்டப் பிரதேச மக்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் காரணமாக காலி-மாத்தறை வீதியில் நேற்று ஐந்து மணித்தியால ங்கள் வரை வாகன போக்குவரத்து முற்றாகத் தடைப் பட்டுள்ளது.**

கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட டிருந்த இரு வள்ளங்களுக்கு இனம் தெரியாத குழுவினர் நேற்று முன்தின மிரவு தீ வைத்து நாசமாக்கியுள்ள னர். இதற்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டுமெனக் கோரி நேற்று நடத் தப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது இக்குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

தீ வைக்கப்பட்ட இரு வள்ளங் களும் வீதிக்கு குறுக்கே போடப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வள்ளங்களின் பெறுமதி சுமார் 15 லட்சமாகும் ஆர்ப்பாட்ட இடத் திற்குச் சென்ற பொலிஸ் ஜீப் ஒன்று இவர்களின் தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளது.

பதற்ற நிலையைத் தணிக்கும் முகமாக அங்கு சென்ற காலி உதவி அரசாங்க அதிபருக்கு கல் வீசப்பட்டுள்ளது. இவரும் பொலி சாரும் நஷ்டஈடு தருவதாக உறுதி யளித்தமையைத் தொடர்ந்து அங்கு நிலமை வழமைக்கு திரும்பியுள்ள தாகத் தெரியவருகிறது.

# மங்கள சமரவீர — திசநாயக்க இரகசியமாகச் சந்தித்துப் பேச்சு

பொதுசன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர அமைச்சர் திஸநாயக்க வுடன் நேற்று முன்தினம் இரகசிய பேச்சுவார்த்தையை நடத்தியிருப்ப தாகத் தெரியவந்துள்ளது.

ஆனால், இந்தப் பேச்சுவார்த்தை யில் என்ன பேசப்பட்டது என்பது குறித்து எந்தவித தகவல்களும் வெளிவரவில்லை. இப்படியான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதா வெனக் கேட்டபோது, பதிலளித்த பொ.ஐ.மு.பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர இப்படியான பேச்சுவார்த்தை நடத்திய சாத்தியப் பாடுகள் இல்லாமலும் இல்லை யெனத் தெரிவித்தார்.

அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க மாத்திரமல்ல, கட்சியிலிருந்து வெளி யேறிய முன்னாள் உறுப்பினர்கள் மீண்டும் கட்சியில் இணைவதற்கு எதுவித தடையுமில்லையென பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர மேலும் கூறியுள்ளார்.

# இலங்கை பிரஜா உரிமையற்ற இந்திய வம்சாவழியினருக்கு பிரஜாவுரிமை

## - இரு வாரங்களுக்குள் சட்ட மூலம்

(கொழும்பு)

இலங்கையில் பிரஜாவுரிமை அற்ற இந்திய வம்சாவழி மக்களுக்கு குடியுரிமை வழங்கும் சட்டமூலம் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் நிறைவேற்றப்படும் என்று அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இந்திய வம்சாவழியைச் சேர்ந்த சுமார் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் பேர் பிரஜாவுரிமை அற்று இருப்பதாக செய்தியாளர் மாநாட்டில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிமாசாஸ்திரி ஒப்பந்தம் மூலம் பிரஜாவுரிமை கிடைக்கப்பெறாத மக்கள் இந்தச் சட்டமூலத்தின்மூலம் நன்மை அடைவார்கள் எனத் தெரியவருகிறது.

# புலிகள், சனாதிபதிக்கு வழங்கப்பட்ட திட்ட வரைவுகளில் பாரிய வேறுபாடில்லை

## - அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

புலிகளிடம் சமர்ப்பிக்கப்பட்ட திட்ட வரைவிற்கும், சனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட திட்ட வரைவிற்கு மிடையில் பாரிய வேறுபாடு இல்லை யென ஜீ.எல். பீரிஸ் கூறியுள்ளார்.

இடைக்கால நிர்வாக சபை தொடர்பான ஆலோசனைத் தொகுதி ஒன்றே புலிகளுக்கு அனுப்பியுள் ளோம். இது குறித்த ஆலோசனை களில் மேலதிக விளக்கத்தை முன்னாள் நோர்வே தூதுவர் வெஸ் பேர்க் கோரியிருந்தார். இதற்க மைய அரசினால் வழங்கப்பட்டதிட்ட வரைவில் சிறிய மாற்றம் செய்யப் பட்டது. இது தொடர்பான ஆலோசனை களை வார இறுதிப் பத்திரிகை யொன்றில் வெளியிடப்பட்டுள்ளது.

இம்மாற்றங்கள் அடங்கிய ஆலோசனைகளை சனாதிபதிக்கு அரசினால் வழங்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு திட்ட ஆலோசனை களிலும் பாரியளவு மாற்றங்கள் எதுவும் இல்லையென அவர் மேலும் கூறியுள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறி விப் பதற்கான செய்தியாளர் மாநாட் டில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார். இவ்விரண்டு திட்ட வரைவிற்கும் இடையே வேறு பாடுகள் உள்ளதாக கொழும்பில் செய்திகள் வெளியாகி இருந்தன.

# குரங்குப்பாஞ்சான் முகாமை அகற்ற புலிகள் முன்வரவேண்டும்

## - பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்

(கொழும்பு)

திருமலை குரங்குப்பாஞ்சான் பகுதியில் அமைந்துள்ள தமது முகாமை அகற்ற விடுதலைப்புலிகள் முன்வரவேண்டும் என்று சிறிலங்கா படைத்துறை அமைச்சின் செயலா ளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ கேட்டுக் கொண்டுள்ளார்.

ஜப்பானில் இடம்பெற்ற ஆறாவது சுற்றுப்பேச்சுக்களின்போது எட்டப் பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் முடிவை இருபகுதியும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

# கட்டடப்பொருள் கூட்டுத்தாபனம்; தனியார் மயமாக்கத் தீர்மானம்

(கொழும்பு)

கட்டடப் பொருள் கூட்டுத்தாப னத்தை தனியார் மயப்படுத்த சிறிலங்கா அரசாங்கம் தீர்மானித் துள்ளது.

வருடாந்தம் 541 மில்லியன் ரூபா நஷ்டம் கட்டடப்பொருள் கூட்டுத் தாபனத்திற்கு ஏற்பட்டுள்ளதாக வீடமைப்புத் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

ரோக் நிறுவனத்தின் ஊடாக விரிவான முறையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் ஊழியர்களுக்கு அநீதி ஏற்ப டாத வகையில் நஷ்டஈடு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

# பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படும்வரை இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்த வேண்டும்

## - இடது சாரிகள் அரசிடம் வலியுறுத்து

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு ஏற்படும் வரை இடைக்கால நிர்வாகம் ஏற்படவேண்டுமென இடது சாரிகள் அரசியல் கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

20 ஆண்டாக போர் புரிந்த இரு தரப்பினரும் குறுகிய காலத்தில் சமாதானத்தை அடைவது சாத்திய மல்ல என இக்கட்சியின் தலைவர் கள் கூறியுள்ளனர். "இடைக்கால நிர்வாகமும் இடதுசாரி கட்சிகளின் பொறுப்புகளும்" என்ற தொனிப் பொருளில் கண்டியில் நடைபெற்ற கருத்தரங்கில் அவர்கள் இதனைக் கூறியுள்ளனர்.

லங்கா சமசமாஜக்கட்சியின் அரசியல் பீட அங்கத்தவரும், மத்திய மாகாண சபை உறுப்பினருமான லால் விஜயநாயக்க உரையாற்றும் போது இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் நடைமுறைக்கு நீண்டகாலம் எடுக்கும். போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அரசியல், நிர்வாக நடவடிக்கை களை இயல்பாகப் பேணிச் செல்வ தற்கு இடைக்கால நிர்வாகம் சிறந்த, குறுகிய காலத் தீர்வாக அமையும் என அவர் மேலும் சுட்டிக்காட்டி யுள்ளார்.

நிரந்தர சமாதானத்தை அடையும் மக்கள் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதற்காக அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றுசேர வேண்டும். அரசும் சமாதான முயற்சிகளை வெளிப்படையாக மேற்கொள்ள வேண்டுமென அவர் கூறியுள்ளார்.

# உலக உணவுத்திட்டத்தின் கீழ் விவசாய உபகரணங்கள் வழங்கல்

(உடையார்கட்டு)

உலக உணவு திட்டத்தின் ஊடாக உடையார்கட்டு, விசுவமடுப் பிரதேசப்பகுதி விவசாயிகளுக்கு இலவசமாக வாளி, மண்வெட்டி, பெரியகத்தி, சின்னக்கத்தி, என்பன வழங்கப்பட்டுள்ளன. தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுநிறுவனமும் உடையார்கட்டு கமநலசேவை நிலை யமும் இணைந்து இவற்றை வழங் கினர். கடந்த 19ஆம்,21ஆம் திகதி களில் இவை வழங்கப்பட்டன. (19)

- 12 இலட்சம் குடும்பங்களுக்கு -

# நிரந்தர காணி உறுதி வழங்கும் சட்டமூலத்தை அடுத்தவாரம் சமர்ப்பிக்க அரசு தீர்மானம்

(கொழும்பு)

பன்னிரெண்டு இலட்சம் குடும்பங் களுக்கு நிரந்தர காணி உறுதிகளை வழங்குவதற்கு வகை செய்யும் காணி உரிமை சட்ட மூலத்தை அடுத்த வாரம் சமர்ப்பிப்பதென அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

சனாதிபதி இந்தச் சட்டமூலம் தொடர்பாக சிபார்சுகளைச் சமர்ப்பித் தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தின் போது இந்தச் சட்டமூலத்திற்கு அங்கீகாரம் பெறுவதென அமைச்ச ரவை முடிவுசெய்துள்ளது.

தேவையொன்றில் சனாதிபதி இதற்கு முன்பாக சிபார்சுகளை சமர்பிக்க முடியும் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# ஆசிரிய இடமாற்றங்களுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(அலுவலக செய்தியாளர்)

மாவட்டங்களுக்கிடையிலான ஆசிரிய இடமாற்றத்திற்கான விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி இடமாற்றத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு இது தொடர்பான சுற்று நிருபங்கள் வலயக்கல்வி திணைக்களப் பணி மனைகளினூடாக பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப் படவுள்ளதாகவும் இடமாற்றத்திற் கான விண்ணப்பப் படிவங்களை ஆகஸ்ட் 30ஆம் திகதிக்கு முன்னதாக அந்தந்த வலயக் கல்விப் பணிமனைகளூடாக அனுப்பி வைக்குமாறும் மாகாணக் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. (பா)

# தனியார் துறையில் 10 ஆயிரம் பட்டதாரிகளை இணைக்க அரசாங்கம் செயற்திட்டம்

பட்டதாரிகளுக்கு தொழிற் பயிற்சி வழங்கும் வேலைத் திட்டத் திற்கு இயன்றளவு உதவி செய்யு மாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அரசின் அனுசரணையுடன் பயிற்சி பெறும் பட்டதாரிகள் அனைவருக் கும் கட்டாயமாகத் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக் குமாறு அவர் மேலும் கூறியுள்ளார். நான்கு அமைச்சுக்கள் கூட்டாக அமுல் செய்யும் இத்திட்டத்தின் நோக்கம் 10 ஆயிரம் பட்டதாரிக ளுக்கு தனியார்துறையில் வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதாகும். இதற்கான சில அமைச்சுக்களை இணைத்து விசேட செயலணியும் உருவாக்கப்பட்டுள்ளது.

பயிற்சி பெறும் ஒவ்வொரு பட்ட தாரிக்கும் அரசின் மூலம் 4000 ரூபாவும், தனியார் நிறுவனத்தின் ஊடாக 2000 ரூபாவும் வழங்கப்பட வுள்ளது. இவ்வாண்டு 1200 பட்டதாரி களை வங்கிகளிலும், தனியார் நிறுவனங்களிலும் இணைத்துக் கொள்ள அரசு திட்ட மிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிராம அபிவிருத்தி வங்கி மூலம்

# இரணைதீவு மக்களுக்கு மீன் பிடிக்க கடன் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிராமிய அபிவிருத்தி வங்கியின் மூலம் இரணைதீவு மக்களுக்கு மீன் பிடிக்க கடன் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி இரணைதீவு இரணை மாதா கிராம மக்களின் பிரதான தொழிலான மீன்பிடியை மேம்படுத் தும் பொருட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய அபிவிருத்தி வங்கியினூடாக கடந்த 20ஆம் திகதி முதற் கட்டமாக 18 பயனாளிகளுக்கு இரண்டு இலட் சத்து ஐம்பதாயிரம் ரூபா வழங்கப் பட்டுள்ளது.

மேற்படி வங்கி மூலம் கடன் திட்டத்திற்காக மூன்று இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வு இரணைமாதா நகர் கடற்றொழிலாளர் சங்க செயலகத் தில் நடைபெற்றது. (பா)

# முன்பள்ளி விளையாட்டு

உடையார்கட்டு வடக்கு கலைமக ள் முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா கடந்த செவ்வாயன்று மாலை மூன்றுமணிக்கு நிர்வாகக்குழுத் தலைவர் நடேசபிள்ளை தலைமை யில் முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. இதில் உடற்பயிற்சி யும் சிறுவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் ஏனைய போட்டிக ளும் இடம்பெற்றன. (19)

# குடும்பப் பிரச்சினைகளில் தலையீடு செய்யும் கடற்படை

## கட்டுப்படுத்த மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு நயினாதீவு ஆகிய இடங்களில் சமூகப் பிணக்குகளில் அழையா விருந்தாளியாகச் செயற்படும் கடற்படையினரின் தலையீட்டை கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குடும்பங்கள் சமூகங்களிடையே ஏற்படும் சிறு சிறு சிக்கல், பிணக்கு களில் அழையாவிருந்தாளிகளாக தலையிடும் கடற்படையினர் விளங்காத சிங்கள வார்த்தைகளில் ஏசியும், பிரச்சி னையைப் பெரிது படுத்துவதால் தாம் பெரும் சிரமத்திற்கு உள்ளா வதாக அப்பகுதி மக்கள் தெரிவித் துள்ளனர். இந்நிலையில் இவர்களின் தலையீட்டை இல்லாது செய்யுமாறு மக்கள் கோரியுள்ளனர். (33)

# யாழ். புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளில் பாதுகாப்பு குறித்த விவகாரங்கள் குறுக்கிடுகின்றன

## அரசு ஏற்கின்றதென்கிறார் பிரட்மன் வீரக்கோன்

**புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை யாழ்ப்பாணக் குடாநாட்டில் மேற்கொள்ளும்போது, பாதுகாப்புடன் தொடர்புடைய விவகாரங்கள் குறுக்கிடுவதாகத் தெரிவிக்கும் பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கும் விடயம் தொடர்பில் உண்மையான பின்னணி இருப்பதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளதாகக் கூறியுள்ளார்.**

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுக்கும்போது எதிர்கொள்ளப்படும் சவால்களை அரசாங்கம் தெளிவாக அறிந்து வைத்திருப்பதாகக் குறிப்பிட்ட பரதமரின் செயலாளர், இருபது வருடகால போர்ப் பாதிப்புக்களை ஒரு வருடத்தில் சீர்ப்படுத்த முடியாதென்பதை அனைத்து தரப்பினரும் உணரவேண்டுமென்று சொன்னார்.

யாழ்ப்பாணக்குடாநாட்டில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியேற்றம் உட்பட பல திட்டங்களின் விபரமடங்கிய "யாழ்ப்பாணத் திட்டம்" என்ற திட்ட வரைவை வடக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு, அகதிகள் விவாகர அமைச்சு தயாரித்திருக்கும் வரைவு நேற்று முன்தினம் கலதாரி ஹோட்டலில் நடைபெற்ற நிகழ்வில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

அரச அமைச்சர்கள், யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினர்கள், நிதியமைச்சின் அதிகாரிகள் உட்பட பல அரச உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் உரையாற்றும் போதே பிரதமரின் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்; யாழ்ப்பாண அபிவிருத்தி என்று நோக்கும்போது விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் என்று பல தரப்பட்ட துறைகளையும் முன்னேற்ற வேண்டும்.

ஆனால், அபிவிருத்தி என்று முன்னெடுக்கப்படும் செயற்பாட்டின்போது, பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளும், இராணுவத் தலையீடுகளும் இடம் பெற்று வருகின்றன. இதனால் சில தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உதாரணமாக, மீன்பிடித் தொழில் பாதிக்கப்படுவதை உணர்ந்து கொண்டுள்ள அரசாங்கம் அதற்கேற்றவாறான நடவடிக்கைகளை படிப்படியாக எடுத்து வருகின்றது.

இவ்வாறான பிரச்சினைகளை ஒரே நாளில் தீர்க்க முடியாது என்பதை சம்பந்தப்பட்ட தரப்பினர் உணர வேண்டும்.

வெளிநாடுகளில் கிடைக்கும் உதவிகள் மற்றும் டோக்கியோ மாநாட்டின்போது கிடைக்கப்பெற்ற உதவிகளின் பெரும்பாலான வீதம் வடக்கு-கிழக்கு மேம்பாட்டிற்கே பயன்படுத்தப்படும் என்றார்.

இந்நிகழ்வில் தலைமை தாங்கி உரையாற்றிய புனர்வாழ்வு, புனரமைப்பு, அகதிகள் மீள்குடியேற்ற அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன, யாழ்ப்பாணத்தினை மீளக் கட்டியெழுப்பும் திட்டங்களடங்கியஇந்தயாழ்ப்பாணத் திட்ட வரைவு, ஏற்படுத்தப்படவுள்ள இடைக்கால நிர்வாக சபைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு கைகொடுக்குமெனத் தெரிவித்தார்.

கடந்த 16 மாத காலம் என்னுடைய அமைச்சு என்ன செய்ததெனக் கேள்வியெழுப்பிய பலர், அமைச்சுக்கு தேவையான நிதி மற்றும் இதர வளங்கள் கிரமமான முறையில் கிடைக்காததை அறியாமலிருப்பதாகத் தெரிவித்த அமைச்சர்,

வடக்கு - கிழக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்தும் முயற்சிகளில் எத்தகைய சவால்கள் வந்தாலும் சளைக்காமல் செயற்படப்போவதாகக் கூறினார்.

ஜிரிசற் நிறுவனத்தின் இலங்கைக்கான உதவிப் பிரதிநிதி உட்டா போர்கஸ், புனர்வாழ்வு, புனரமைப்பு, அகதிகள் விவகார அமைச்சின் செயலாளர் ஏ. ஜெயரட்ணம், மேலதிக செயலாளர் ரி. குமாரதாசன் ஆகியோரும் இந்நிகழ்வில் உரையாற்றினார்கள்.



## வானொலிப் பெட்டி திருடியவர் கைது

துணுக்காய் பகுதியில் வானொலிப்பெட்டி திருடிய நபர் ஒருவர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அனிஞ்சியங்குளம் இரண்டாம் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. திருடப்பட்ட வானொலிப்பெட்டி துணுக்காய்காவல் பணிமனையினரால் மீட்கப்பட்டதுடன் சந்தேக நபர் மல்லாவி மாவட்ட நீதி மன்றில் முற்படுத்தப்பட்டார்.

## கால் நடைகளை கட்டி வளர்க்குக

(உடையார்கட்டு)

உடையார்கட்டு குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள நெற் பயிர்ச்செய்கையை கால் நடை அழிவிலிருந்து காப்பாற்றி உற்பத்தியை மேம்படுத்த கால்நடை வளர்ப்போர் அவற்றை கட்டி வளர்த்து ஒத்துழைக்குமாறு விசுவமடுப் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கேட்டுகொள்கின்றனர். (19)

## ஆனமடுவவில் கட்சி மோதல் ஐ.தே.க. ஆதரவாளர் மூவர் காயம்

### பொ.ஐ.மு.வினரின் கடைகள் சேதம்

ஆனமடுவ தேர்தல் தொகுதியில் தலாகொளவெவ என்ற இடத்தில் ஐ.தே.க., பொ.ஐ.மு. கட்சிகளிடையே கடந்த 22ஆம் திகதி ஏற்பட்ட மோதலில் ஐ.தே.க. ஆதரவாளர் மூவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த மோதலின் போது பொ.ஐ. மு. ஆதரவாளர்களின் மூன்று வியாபார நிலையங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன. ஐ.தே.க. ஆதரவாளர்களை தாக்கியது தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் இருவர் தேடப்பட்டுவருவதாகவும் வியாபார நிலையங்களை சேதமாக்கிய ஐ.தே.க. உறுப்பினர்களையும் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## சர்வோதைய நிறுவனம் வன்னியில் அ.சா. நிறுவனங்களுடன் சந்திப்பு

(அலுவலக செய்தியாளர்)

சர்வோதைய நிறுவனத்தின் தலைமைக்காரியாலய துறைசார்ந்த பணிப்பாளர்கள் வன்னியில் சந்திப்பொன்றை நடத்தியுள்ளனர்.

மேற்படி நிகழ்வு கடந்த புதன்கிழமை பகல் ஒரு மணியளவில் தமிழர் புனர்வாழ்வுக்கழக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இச்சந்திப்பில் ரொறாட் நிதித்திட்டத்தின் கீழ் கிளி. மாவட்டத்தில் எதிர் காலத்தில் செயற்படுத்தப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாகவும் அவற்றை பூர்வாங்க நடவடிக்கை மூலம் தாம் விரைவில் மேற்கொள்ளவுள்ளதாகவும் வன்னியில் உள்ள அரச, அரச சார்பற்ற நிறுவனத் தலைவர்களுக்கு மேற்படி சந்திப்பில் தெரிவித்துள்ளதாக தமிழர் புனர்வாழ்வுக்கழகச் செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது. (பா)

## விசர் நாய்க் கடியை ஒழிக்க ஐந்தாண்டுத் திட்டம்

விசர் நாய்க்கடி நோயை இலங்கையிலிருந்து முற்றாக ஒழிப்பதற்காக ஐந்தாண்டுத் திட்டம் அமுல் செய்யப்படவுள்ளது. கண்டியில் இயங்கும் உயிரினங்களுக்கான நலன் புரிச்சங்கத்தின் ஊடாக சமூகப் பாதுகாப்பு அமைப்பு இத்திட்டத்தை சுகாதார அமைச்சிடம் சமர்ப்பித்துள்ளது. கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்துவதன் மூலம் இன்னும் 07 ஆண்டுகளில் விசர் நாய்க் கடியை முற்றாக ஒழிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நாய்களின் இனப்பெருக்க சக்தியைக் கட்டுப்படுத்துவது. அவற்றிற்கு தடுப்பு மருந்துகளை வழங்குவது. செல்லப்பிராணிகளான நாய்களை வளர்ப்போர்க்குள்ள பொறுப்புக்கள் குறித்து விளக்கமளிப்பது போன்ற பல விடயங்கள் இத்திட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

## உடையார்கட்டில் விவசாயிகளுக்கு இரு நாட்கள் பயிற்சி வகுப்பு

(உடையார்கட்டு)

உடையார்கட்டு கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்பு எதிர் வரும் 30ஆம்,31ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. கமக்காரர் அமைப்பிற்கான கணக்கு வைப்பு முறை பராமரிப்பு முறை (நீர்ப்பாசனத் திட்டம் சிறியது) சிறிய நீர்ப்பாசனக் குளங்களில் மண்தரக் கட்டுப்பாடு, பயிர் காப்புறுதியின் விவசாய காப்புறுதித் திட்டம், கமக்காரர் அமைப்பு விஸ்தரிப்பு, காலபோக கூட்டத் தீர்மானங்களை நிறைவேற்றுதல், தென்னை மானியம், தென்னை பயிர்ச் செய்கையில் நோய்த் தாக்கம். கால் நடை வளர்ப்பில் நல்லின இனங்களை அறிமுகப் படுத்தலின் அவசியம் போன்ற பல்வகை விடயங்கள் தொடர்பாக இப் பயிற்சி வகுப்பு நடைபெறவுள்ளது.

உடையார்கட்டு கமநல சேவை நிலையத்தில் இடம்பெறவுள்ள இப்பயிற்சி நிகழ்வினை த.பொ.மே. நிறுவன முல்லை. மாவட்ட செயலகமும், கமநல சேவை திணைக்களமும் இணைந்து பொருண்மிய நிறுவன அனுசரணையுடன் ஒழுங்கு செய்துள்ளதாக முல்லை. மாவட்ட பொருண்மிய செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது. (19)

## ஈ.பி.டி.பி. தேசவிரோதக்குழுவினர் வேலணை மக்கள் மீது கொலைமிரட்டல்

பிரசுரங்களை கிழித்தமைக்காக ஈ.பி.டி.பி. குழு உறுப்பினர்கள் கொலைப் பயமுறுத்தலை மக்களுக்கு விடுத்ததாகவும் சிலரைக் கடத்திச் சென்று கடுமையாகத் தாக்கியதாகவும், வேலணை துறையூர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

அவர்களால் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

ஈபிடிபி உறுப்பினர்களாகிய நெப்போலியன், பாலதீபன், போல் மற்றும் சிலருடன் சிறிலங்காப் பொலிசாரும் இணைந்து 22ஆம் திகதி இரவு 9.00 மணியளவில் புங்குடுதீவு பிரதான வீதியில் உள்ள மதில்களில் நோட்டீஸ் ஒட்டினார்கள். அதனை இனம் தெரியாத நபர்கள் அகற்றி விட்டனர்.

23ஆம் திகதி காலை நெப்போலியன், பாலதீபன், போல் மற்றும் சிறிலங்காப் பொலிசார் சிவில் உடையில் பிக்கப், மோட்டார் சைக்கிள் என்பவற்றில் வந்து வேலணைத் துறையூர் மீன் சந்தையில் வைத்து வாய்க்கு வந்த படி மக்களைப் பேசிய பின்னர் இனிமேல் இது போன்ற செயல்கள் நடக்குமானால் தலைகள் றோட்டில் தான் உருளும் என்று கூறிவிட்டுப் போனார்கள்.

இதனால் எமது மக்கள் பயமும் பீதியும் அடைந்த நிலையில் உள்ளனர். இவர்கள் 16ஆம் திகதியன்று தீவகத்தில் உள்ள பல இளைஞர்களை இரவோடு இரவாகக் கொண்டு சென்று சித்திரவதைக்கு உள்ளாக்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே தாங்கள் கூடிய விரைவில் இதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலமைப்பரிசில் வழங்கும் திட்டம் பிற்போடப்பட்டுள்ளது

(அலுவலக செய்தியாளர்)

2002 கல்வியாண்டு மாணவர்களுக்கு வழங்கப்படவிருந்த புலமைப்பரிசில் திட்டம் பிற்போடப்பட்டுள்ளது.

ஆளுமைப் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் ஆகஸ்ட் 01ஆம் திகதி வழங்கப்படவிருந்த மேற்படி மாணவர்களுக்கான புலமைப் பரிசில் திட்ட நிதி வழங்கும் வைபவம் மேற்படி திகதியில் நடைபெறமாட்டாது என கல்வியமைச்சு அறிவித்துள்ளது.(பா)

## அனிஞ்சியங்குளம் பகுதியில் காவல்துறை கசிப்பு வேட்டை

அனிஞ்சியங்குளம் 2ஆம் பகுதியில் கசிப்பு வேட்டையில் ஈடுபட்ட துணுக்காய் காவல் பணிமனையினர்பெருமளவுகோடாவைக் கைப்பற்றியதுடன் கசிப்பு உற்பத்தியாளரையும் கைது செய்துள்ளனர்.

கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற இச்சம்பவத்தில் 210 லீற்றர் கோடாவும் கசிப்பு உற்பத்தி உபகரணங்களும் காவல் துறையால் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் சந்தேக நபர் மல்லாவி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

## கிளி. மாவட்டத்தில் முன்னோடிகளாக இரு கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கிவரும் கூட்டுறவுச் சங்கங்களில் முன்னோடியாகச் செயற்பெற்று வரும் சிறந்த சங்கங்களாக இரண்டு கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவு செய்யப்பெற்றுள்ளன.

இதனடிப்படையில் முதலாவது சிறந்த கூட்டுறவுச் சங்கமாக கரைச்சி வடக்கு ப.நோ. கூ. சங்கமும். இரண்டாவதாக அக்கராயன் ப.நோ. கூ. சங்கமும் தெரிவு செய்யப்பெற்றுள்ளன.

சங்கங்களுக்கிடையிலான மேற்படி தெரிவினை கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)



## சிந்தனைக்கு

நீண்டதும் - கடினமானதும் - அபாயகரமானதுமான தமிழீழ யுத்தத்தில் எமது விடுதலை வீரர்கள் சந்தித்த இன்னல்களை, இடையூறுகளை, அனுபவங்களை எழுத்தில் விபரிக்க முடியாது.

தமிழீழத்தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 26-07-2003

## ஒரு தலைப்பட்சமான முடிவு!

திருகோணமலை குரங்குப்பாஞ்சான் பகுதியில் விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்ட முகாமை அகற்றுமாறு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு விடுத்த கோரிக்கையை விடுதலைப்புலிகள் நிராகரித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந் நிலையில், இது ஒரு போர் நிறுத்த உடன்பாட்டு மீறல் எனப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு குற்றம் சாட்ட முனைந்துள்ளது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடு குறித்துத் தமிழ் மக்கள் அடிக்கடி விசனம் கொள்வதுண்டு. கண்காணிப்புக் குழுவின் முடிவுகள் பெரும்பாலும் தமிழ் மக்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் மாறானதாக இருப்பதே இதற்குக் காரணமாகும். எடுத்துக் காட்டாக, புலிகளின் கப்பல்கள் மூழ்கடிப்புத் தொடர்பாகக் கண்காணிப்புக்குழுவின் அறிக்கைகளைச் சுட்டிக்காட்ட முடியும். இது மாத்திரமல்ல, இராணுவத்தின் யுத்தநிறுத்த மீறல் தொடர்பான புலிகளின் குற்றச்சாட்டுக்களைக் கண்காணிப்புக்குழு கருத்திற் கொள்வதாகவும் இல்லை. அதாவது, சிறிலங்கா அரச தரப்பின் தகவல்களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை விடுதலைப் புலிகள் வழங்கும் தகவல்களுக்கோ அன்றி தமிழ் மக்கள் தரப்புத் தகவல்களுக்கோ அவர்கள் கொடுக்காமையே இதற்குக் காரணமாகும்.

இத்தகையதொரு உணர்வையே குரங்குப்பாஞ்சான் புலிகளின் முகாம் தொடர்பான கண்காணிப்புக் குழுவின் அறிவிப்பும் தமிழ் மக்களுக்குக் கொடுப்பதாகவுள்ளது. ஏனெனில், இம்முகாம் அகற்றப்பட வேண்டும் எனக் கோரியதினை நீதியற்ற தீர்ப்பென்றே தமிழ் மக்கள் கொள்கின்றனர். அதாவது, விடுதலைப் புலிகளின் கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பதே தமிழ் மக்களின் அபிப்பிராயமாகும்.

குரங்குப்பாஞ்சான் பகுதியில் புலிகளின் முகாம் அமைப்பதென்பது ஒரு போர் நிறுத்த மீறல் எனக் கூறுவது எந்த விதத்திலும் அர்த்தமுள்ளதொன்றல்ல. ஏனெனில், இம் முகாம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைக்கப்பட்டதொன்றாகும். விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் முகாம் ஒன்றை அமைப்பது போர் நிறுத்தத்தை மீறும் செயல் எனக் கூறுவது தவறான தொன்றாகும்.

மேலும் விடுதலைப்புலிகள், யுத்த நிறுத்த உடன்பாடு கைச்சாத்தான பின்னர் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசம் தொடர்பான வரைபடத்தைக் கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைத்திருந்தனர். இவ் வரைபடத்தில் குரங்குப்பாஞ்சான் பகுதி தெளிவாகவே விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி என அடையாளப்படுத்தப்பட்டிருந்தது.

ஆகையினால், விடுதலைப்புலிகள் இப்பகுதியில் முகாம் அமைத்தமையானது யுத்த நிறுத்த மீறல் எனக் கொள்ளத்தக்க தொன்றல்ல. சிறிலங்கா இராணுவம் தமது கட்டுப்பாட்டுப் பகுதி எனக் கூறுவதாயின் அப்பகுதியில், ஏன் இராணுவ முகாமோ அன்றி இராணுவத்தின் நடமாட்டமோ இருந்ததற்கான ஆதாரங்கள் இருந்ததாக இல்லை.

இது ஒருபுறம் இருக்க, குரங்குப்பாஞ்சான் பகுதி யாருடைய கட்டுப்பாட்டுப் பகுதி என்பதை ஏற்கனவே கண்காணிப்புக் குழு தீர்மானித்திருந்திருத்தல் வேண்டும். அதாவது, நெருக்கடி வரும் முன்னரே இப்பகுதி யாருடையதென்பது குறித்து முடிவு செய்திருத்தல் வேண்டும். இதனை யுத்த நிறுத்த உடன்பாடும் வலியுறுத்துவதாகவே உள்ளது.

யுத்த நிறுத்த உடன்பாட்டின் பிரகாரம் உடன்பாடு கைச்சாத்தாகி முப்பது தினங்களுக்குள் இரு தரப்பும் - புலிகளும், அரசாங்கமும் - தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் தொடர்பான தகவல்களை 30 நாட்களுக்குள் வழங்கியிருத்தல் வேண்டும். இதனை அடிப்படையாகக் கொண்டு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு எல்லைக் கோடுகளை நிர்ணயம் செய்திருத்தல் வேண்டும். ஆனால், சிறிலங்கா இராணுவம் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் தொடர்பான தெளிவான வரைபடத்தை வழங்காதது மட்டுமல்ல, கண்காணிப்புக் குழு இது குறித்து முடிவெதையும் மேற்கொள்ளாமலும் இருந்துவிட்டது.

இந்நிலையில், குரங்குப்பாஞ்சானில் புலிகள் தமது முகாம் ஒன்றை அமைத்ததைத் தொடர்ந்து அதனை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி எனக் கூறியதைத் தொடர்ந்து கண்காணிப்புக் குழுவும் குரங்குப்பாஞ்சானை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி எனக் கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்க முடிவல்ல.

திருமலை, மட்டக்களப்புப் பகுதிகளில் சில இடங்களில் கட்டுப்பாட்டுப் பகுதி தொடர்பான சில சிக்கல்கள் உண்டுதான். ஆனால், இதற்குக் கண்காணிப்புக் குழு ஏற்கனவே தீர்வைக் கண்டிருத்தல் வேண்டும். இராணுவம் ஒரு பகுதிக்குள் என்றோ ஒரு நாள் போய் வந்தது என்பதையோ அன்றி இராணுவத் தரப்பு தனது கட்டுப்பாட்டுப் பகுதி எனக் கூறுவதைக் கொண்டோ கட்டுப்பாட்டுப் பகுதிகளைத் தீர்மானிக்க முடியாது.

இவ்வாறாக கண்காணிப்புக்குழு நடந்து கொள்ளுமேயானால் யுத்த நிறுத்தத்தினைக் கண்காணிப்புச் செய்வதில் மேலும் பல சிக்கல்கள் எழக்கூடும். அதாவது, இராணுவம் புதிய புதிய சிக்கல்களை உருவாக்கக் கூடும். கண்காணிப்புக் குழுவும் அதற்கு ஒத்திசைவாகச் செயற்பட வேண்டியதாகிவிடும். இது யுத்த நிறுத்தத்தை அமுல் செய்வதற்கும் கண்காணிப்பதற்கும் உகந்ததொன்றாக இருக்க முடியாது.

# இடைக்கால நிர்வாக சபை அமைப்பதை தலையிட்டு தடுக்க சனாதிபதியிடம் கோரிக்கை

...க்கு கிழக்கு இடைக்கால நிர்வாகசபை... ஏற்படுத்தும் முயற்சிகள் மற்றும் கிழக்கிற்கான தனியான அலகொன்றை ஏற்படுத்துவது தொடர்பான விடயங்களில் தலையிட்டு அவற்றைத் தடுத்து நிறுத்துமாறு கோரி தேசிய ஒருங்கிணைப்பு குழு நேற்று முன்தினம் சனாதிபதி மாளிகையில் சனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவிடம் மகஜரொன்றைக் கையளித்துள்ளது.

நூற்றுக்கும் அதிகமான மகாநாயக்கதேரர்மார், பௌத்த பிக்குமார் மற்றும் 47 நிறுவனங்கள் இந்த மகஜரில் கையொப்பமிட்டுள்ள அதே வேளை, இவ்வாறான அரசின் முயற்சிகள் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக அவற்றைத் தவிரப்படுத்துமென சுட்டிக்காட்டியுள்ளனர்.

1981ஆம் ஆண்டில கிழக்கில் இருந்த சனத்தொகை விகிதாசாரம் மற்றும் தற்போது அங்குள்ள நிலைமை தொடர்பாகவும் இந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக சனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இந்த மகஜர் கையளிக்கும் நிகழ்வில் மாதகொட சுமணதிஸ்ஸ தேரர், குசலதம்மதேரர், ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி ஆர்.எஸ். வனசுந்தர, சட்டத்தரணி எச். எல்.டி சில்வா ஆகியோர் கலந்து கொண்டதாக சனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இடைக்கால நிர்வாக சபை அமைக்கும் விவகாரத்தில் தலையிட்டுத் தடுக்குமாறு சனாதிபதி சந்திரிகாவிடம் சுமணதிஸ்ஸ தேரர் மகஜர் கையளிக்கின்றார்.

- இடைக்கால நிர்வாக சபை குறித்த -

# சரியான விபரம் அறியும்வரை சனாதிபதி மக்களுக்கு உரையாற்றாராம்

இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக அரசின் யோசனைகளை அறியும்வரை சனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றமாட்டார் என தெரிவித்துள்ளார். அண்மையில் அவர் "காலத்துக்குகந்த அரசியல்" எனும் கருப்பொருளில் நாட்டு மக்களுக்கு உரையாற்றுவதாக இருந்தது. இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக அரசினது யோசனைக்கும் ஊடகங்கள் தெரிவிக்கும் யோசனைக்கும் இடையே வித்தியாசம் காணப்படுவதால் இதுதொடர்பாக நிலைப்பாட்டை விளக்கமளிக்கும் வரை தமது உரையை பிற்போட்டுள்ளதாக ஊடகத்துறைப் பணிப்பாளர் ஜினதாச பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சமாதானத்தை உறுதிப்படுத்த வேண்டுமாயின்

# ஒரே வகுப்பறையில் பல்லின மாணவர்களும் கற்கும் நிலை உருவாக்கப்பட வேண்டும்

- சனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

(கொழும்பு)

சமாதானத்தை உறுதிப்படுத்த வேண்டுமாயின் பல்லின மாணவர்கள் ஒரே வகுப்பறையில் கற்கும் நிலை மேலும் விரிவாக்கப்பட வேண்டும் என்று சனாதிபதி தெரிவித்துள்ளார்.

இன மற்றும் மத அடிப்படையில் மாணவர்களின் கல்வியை வேறுபடுத்துவது சமாதானத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பல்வேறு இனங்களைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி பயிலும் ஆங்கிலமொழி மூல பாடசாலைகளின் அதிபர்களுக்கும் சனாதிபதிக்குமான சந்திப்பு நேற்று கொழும்பில் இடம்பெற்றபோதே இதனைத் தெரிவித்துள்ளார்.

## நண்பர்கள் போல் நடிப்போரிடம் அவதானமாக இருக்க எச்சரிக்கை

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கி வரும் இரவு தபால் ரயிலில் பிரயாணிகளை மயக்கி அவர்களின் நகைகள், பணம் என்பவற்றை கொள்ளையிடும் குழுவினரிடமிருந்து அவதானமாக இருக்குமாறு அநுராதபுர பொலிஸ் நிலையம் பிரயாணிகளுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

கடந்த சில வாரங்களாக இப்படிப்பட்ட பல புகார்கள் கிடைக்கப்பெற்றிருப்பதாகவும் இந்தக் குழுவில் இளம் யுவதிகளும் அடங்குவர் எனவும் கூறப்படுகிறது. பயணிகளிடம் நண்பர்களைப் போன்று நடந்து குளிர்பானம், இனிப்பு, சொக்லேட் போன்றவற்றில் மயக்க மருந்தைக் கலந்து கொடுத்து அவர்கள் மயங்கிய நிலையில் அவர்களின் உடைமைகளை சூறையாடுவதாகவும் கூறப்படுகிறது.

# கிரிக்கெட் தரவரிசை நிர்ணயத்தில் தவறு எதுவும் நடக்கவில்லை

- சர்வதேச கிரிக்கெட் சபை அறிவிப்பு

"ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளின் தரவரிசைப் பட்டியலை நிர்ணயித்ததில் தவறு நடக்கவில்லை" என கங்குலியின் குற்றச்சாட்டிற்கு சர்வதேச கிரிக்கெட் சபை மறுப்புக் கூறியுள்ளது.

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான தரவரிசையை நிர்ணயிப்பதில் தவறு நடந்துள்ளதாக இந்திய கப்டன் கங்குலி கூறிய குற்றச்சாட்டை சர்வதேச கிரிக்கெட்சபை மறுத்துள்ளது.

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான தரவரிசைப் பட்டியல் சமீபத்தில் வெளியிடப்பட்டது. அதில் இந்திய அணி எட்டாவது இடத்திற்குத் தள்ளப்பட்டிருந்தது. இதுபற்றி அதிர்ச்சி தெரிவித்த கங்குலி தரவரிசைப் பட்டியலில் தவறு ஏற்பட்டிருக்கலாம் எனக் குறிப்பிட்டிருந்தார். இதைமறுத்துள்ள சர்வதேச கிரிக்கெட் சபை தலைமை நிர்வாகி மால்கம்ஸி, கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒவ்வொரு அணியில் விளையாடிய போட்டிகள், பெற்ற வெற்றிகள் ஆகியவற்றின் அடிப்படையில் தான் தரவரிசைப் பட்டியல் தயாரிக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தியா சிறப்பாக விளையாடி வருவதை ஒப்புக்கொண்ட அவர் இங்கிலாந்து, நியூசிலாந்து, பாகிஸ்தான், இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள், ஒருசில புள்ளிகள் அதிகம் பெற்றதால் தான் இந்தியா எட்டாவது இடத்திற்குத் தள்ளப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

## குத்துச்சண்டை வீரர் டைசன் மீது அமெ. நீதிமன்றத்தில் வழக்கு

மீண்டும் சர்ச்சையில் சிக்கியுள்ள குத்துச் சண்டைவீரர் மைக்டைசன் ஹோட்டலில் தகராறு செய்துள்ளமையினால் அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிரபல குத்துச்சண்டை வீரர் மைக் டைசன் ஹோட்டல் ஒன்றில் தகராறு செய்து இரண்டு பேரைத் தாக்கியதாக அமெரிக்க நீதிமன்றத்தில் இவர் மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குத்துச்சண்டைகள் மூலம் உலகப் புகழ்பெற்ற மைக் டைசன் தனது சில செய்கைகளினால் நாளுக்கு நாள் செய்திகளில் இடம்பிடித்து வருகின்றார்.

சில ஆண்டுகளுக்கு முன்பு பாலியல் வழக்கில் சிக்கியிருந்த இவர், விடுதலைக்குப் பின்னர் போட்டிகளில் கலந்துகொண்டு வந்தார்.

ஒரு போட்டியின்போது இவான்டர் ஹோலிபீல்டின் காதைக் கடித்துத் துப்பியுள்ளார். இதேபோல் உலகக்கோப்பை சம்பியனான லெனாக்ஸ் லூயிஸின் காதைக் கடித்து பரபரப்பை உண்டாக்கினார்.

இந்நிலையில் அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலுள்ள ஹோட்டல் ஒன்றில் இரண்டு பேரைத் தாக்கியதாக இவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



-வடமராட்சி பொற்பதியில்-

# படையினர் அமைக்கும் புதிய முகாமை அகற்றக் கோரி மக்கள் போராட்டம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு பொற்பதி மீண்பிடிகிராமப்பகுதியில் படையினர் புதிதாக அமைத்து வரும் முகாமை அகற்றக் கோரி வடமராட்சி மக்கள் வெகுசனப் போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

மக்கள் குடியிருப்பை உள்ளடக்கி பாரியமுகாம்ஒன்றை அமைக்கும் நடவடிக்கையைப் படைத்தரப்பு நேற்று முன்தினம் காலை முதல் ஆரம்பித்திருந்தது.

மேற்படி முகாம் அமைக்கும் பணிகளை நிறுத்தக் கோரி நேற்று முன்தினம் முதல் மீனவ சங்கங்களின் ஏற்பாட்டில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் முகாமைச் சூழ்ந்து மறியல் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

இதனையடுத்து மக்களில் மூவரை முகாமுக்கு அழைத்த படையினர் அவர்களுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

முகாம் புனரமைப்புத் தொடர்பான இறுதி முடிவைத் தாங்கள் தெரிவிப்பதாக அப் பேச்சுக்களின் போது படை அதிகாரிகள் உறுதியளித்தனர்.

எனினும் மறியல் போராட்டத்தை விலக்கிக் கொள்ளாதுவிடில் பொலிசாரின் உதவியுடன் கலைக்கப் போவதாகவும் படையினர் அச்சுறுத்தியுள்ளனர்.

இதேவேளை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு பிரதிநிதிகள் சம்பவ இடத்துக்குச் சென்று இராணுவ அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தியுள்ளனர்.

ஆயினும் மறியல் போராட்டம் நடத்திய மக்களுடன் சந்தித்துப் பேச போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் முன்வரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே நேற்று மாலை வரை முகாமை அகற்றுவது தொடர்பான எந்தவொரு முடிவும் அறிவிக்கப்படவில்லை என அங்கிருந்து தற்போது கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (27)

# எல்லைப்புற சிங்களக் கிராமங்கள் வேகமாகப் புனரமைப்பு

(கொழும்பு)

எல்லைப்புறச் சிங்களக்கிராமங்களும் நகரங்களும் வேகமாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

அநுராதபுரம், பதவியா, ராஜிங்கன மற்றும் இவற்றை அண்மித்த பகுதிகளில் புனரமைப்புப் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

வீதிகள் திருத்தப்பட்டு பாடசாலைகள், வைத்தியசாலைகள், கோயில்கள் என்பன புனரமைக்கப்பட்டு வீடுகள் புதிதாக கட்டிக் கொடுக்கப்பட்டு சந்தைப் பகுதிகளிலும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

# வீடுவீடான பிரச்சாரத்துக்கு சனாதிபதி சந்திரிகா உத்தரவு

திடீர் பொதுத்தேர்தல் குறித்துப் பிரஸ்தாபம்

திடீர் தேர்தல் ஒன்றைச் சந்திக்கத்தயாராகுமாறும் வீட்டுக்கு வீடு பிரச்சாரத்தை உடன் ஆரம்பிக்குமாறும் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுசன ஐக்கியமுன்னணி பாராளுமன்ற உறுப்பினர்களைக்கேட்டுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற மத்தியகுழு உறுப்பினர்கள் மற்றும் தேர்தல் தொகுதி அமைப்பாளர்களுக்குமிடையிலான சந்திப்பில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

இச்சந்திப்பின்போது ஆறு மாகாண சபைகளை அடுத்த ஆண்டுக்குள் கலைப்பது தொடர்பாக நீண்டநேரம் விவாதிக்கப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அமெ.சிறிலங்கா தூதுவரின் இல்லத்திற்கு 20 மில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டதேன்

பொ.ஐ.மு.பாராளுமன்ற உறுப்பினர் கேள்வி

(கொழும்பு)

வாஷிங்டனிலுள்ள சிறிலங்காத் தூதுவரின் இல்லத்திற்கு 20 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கப்பட்டது ஏனென்று விளக்கம் தருமாறு பொதுசன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அலுத்கமே வெளிநாட்டமைச்சரிடம் கேட்டுள்ளார்.

அரச நிதி இவ்வாறு துஷ்பிரயோகம் செய்யப்பட்டதற்கு வெளிநாட்டமைச்சும் அரசுமே காரணமாகும்.வாஷிங்டனிலுள்ள தூதுவர் டவின்தா சுபசிங்கவின் இருப்பிடத்திற்கு மாதாந்தம் 4000 அமெரிக்க டொலர் செலவில் தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. நிற்ஸ்பிளாசாவில் நாள் ஒன்றுக்கு 500 டொலர்கள் கட்டணம் செலுத்தி பல நாட்கள் தங்கியுள்ளார். மாதாந்தம் 9000 டொலர் வாடகைக்கு வீடு ஒன்றையும் எடுத்துள்ளார். இச் செலவுகளை வெளிநாட்டமைச்சே செலுத்தியுள்ளது.

தூதுவர் ஏன் வாடகைக்கு வீடு எடுத்திருந்தார் என்ற கேள்வியுடன் மேற்காணும் நிதி துஷ்பிரயோகத்திற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

-அ.சா.நிறுவனங்களின் -

# முகாமைத்துவ உறுப்பினர்களுக்கு இரு நாட்கள் பயிற்சிப்பட்டறை

கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் சர்வதேச கெயர் நிறுவனத்தின் நிதியுதவியுடன் கிளிநொச்சி மாவட்ட அ.சா. நிறுவனங்களின் முகாமைத்துவ உறுப்பினர்களுக்கு அவர்களின் செயற்றிறனை மேம்படுத்தும் அடிப்படையில் பயிற்சிப்பட்டறைகளை நடத்திவருகிறது. நேற்று ஆரம்பமாகிய பட்டறை இன்றும் ஆகஸ்ட் மாதம் 1,2ஆம் திகதிகளிலும் இருபிரிவுகளாகவைக்கப் படவுள்ளது.

இப்பட்டறைமூலம் செயலாண்மை மேம்பாட்டுக்கான நிலைகளில் சமூகத்தினை அறிதல் மற்றும் விளங்கிக்கொள்ளல், தேவைப்பகுப்பாய்வு, இலக்கு மற்றும் நோக்கங்களைத் தீர்மானித்தல், வளங்களையும் தகவல்களையும் இனங்காணல்,திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் போன்ற விடயங்களில் கருத்தாய்வு செய்யப்பெறும் என கிளி.மாவட்ட அ.சா.நி. இணையத்தின் தலைவர் சதா. தனபாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

-முல்லை மீனவர் கைது தொடர்பாக-

# பலகல்ல உட்பட படை அதிகாரிகள் எட்டுப் பேர் மீது விசாரணை

புதுக்குடியிருப்புவாசியான மரியதாசின் கைது தொடர்பான ஆட்கொணர்வு மனுவில் எட்டு இராணுவத்தினர் மீது விசாரணை நடத்துமாறு மேல் நீதிமன்றம் வவுனியா மாவட்ட நீதிமன்றைக் கேட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 25 ஆம் திகதி வட்டுவாகல் கடற்பகுதியில் மீன்பிடித் தொழில் செய்துகொண்டிருந்தபோது இவர் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு இவரைக் கைது செய்து கொண்டு சென்றுள்ளனர்.

இவர் குறித்து விசாரணை நடத்திய மேல் நீதிமன்றமே இவ்வாறு தீர்ப்பு வழங்கியுள்ளது.

மேற்படி மீனவரின் கைது தொடர்பாக முல்லைத்தீவு படையதிகாரிகள் எட்டுப் பேர் மீது விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது. அவர்களில் ஒருவர் தற்போதைய இராணுவத் தளபதியும் அப்போது வவுனியா இராணுவத் தளபதியாக இருந்தவருமான லயனல் பலகல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

# நீதிபதிகளுக்கு மேலதிக கொடுப்பனவு கோருகிறார் நீதியரசர்

(கொழும்பு)

அரசாங்க நிர்வாக சேவை அதிகாரிகளுக்குச் சம்பளத்துக்கு மேலதிகமாக வழங்கப்படும் கொடுப்பனவில் மூன்றில் ஒருபங்கை நீதிபதிகளுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என பிரதம நீதியரசர் சரத் என் சில்வா அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நீதிபதிகள் அரசாங்க சேவையில் முக்கிய பங்காற்றி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசநிர்வாக சேவையின் ஏனைய அதிகாரிகளுக்கு சம்பளத்துக்கு மேலதிகமாக கொடுப்பனவுகள் வழங்கப்பட்ட போதிலும் நீதிபதிகளுக்கு அத்தகைய கொடுப்பனவுகள் வழங்கப்படாமை அநீதியான செயல்என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மூன்று மாவீரர்...

சிறப்புத் தளபதி ரமேஷ், மகளிர் படையணித்தளபதி நிலாவினி மற்றும் ஏனைய படைத்துறைத் தளபதிகளும் இவ்வரவேற்பு நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து விளையாட்டுப் போட்டிகளும் அன்பரசி படையணியின் விசேட மைதானக் காட்சி நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

மாலை நிகழ்வாக லெப். கேணல்களான பாலேந்திரா,மதனா, விநோதன், விசாலகன், மாருதியன், கப்டன் அன்பரசி ஆகிய மாவீரர்களின் புனிதக் கல்லறைகளும் திரை நீக்கம் செய்யப்படவுள்ளன.

## வீரவணக்கம்..

அருகில் கரிபமோட்டை முருங்கன், மன்னார்) என்பவரே சாவடைந்தவராவார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## பிரித்தானிய...

தானிய தூதுவராலயத்தில் விசா வழங்குவது தொடர்பாக நிலவி வந்த ஊழல் குற்றச்சாட்டுக்களை நிவர்த்தி செய்யும் நோக்கிலேயே இந்தத் திட்டம் அமுல் செய்யப்பட இருப்பதாக தெரியவருகின் றது.

## அரசியல்...

அதிகாரம் கிடைப்பது,எமது தலைவிதியை நிர்ணயிக்கும் உரிமை எமக்குண்டு என்ற இலட்சியக் கனவுடனேயே பல்லாயிரக் கணக்கான மாவீரர் விதையாகி உள்ளார்கள். அவர்களின் சுவடுகளில் நடக்கும் மக்களும் அதனையே விரும்புகின்றனர்.

தாயகப் பற்றும், அரசியல் விழிப்புணர்வும்மிக்க எம் மக்களே இன்றுவரையும் எமது போராட்ட வரலாற்றில் தீர்மானம் எடுப்பவர்களாகவும்,தீர்ப்பு வழங்குபவர்களாகவும் இருக்கிறார்கள். என்றுமே எம் இனத்தைச் சிங்கள இனம் வென்றதாகவோ..ஆண்டதாகவோ வரலாறு இல்லை. இனிமேலும் அப்படி நடக்க நாம் அனுமதிக்கப் போவதில்லை. சில ஆட்சியாளர்கள் எம்மைத் தொடர்ந்தும் ஏமாற்ற முனைந்தால் வரலாறு தமிழினத்தை வாழ வைக்கும். சிங்கள இனம் இதனை ஏற்க வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

நாம் நியாயமான கோரிக்கைகளையே முன்வைத்துள்ளோம். புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிட்டதன் படி ஆணவத்தை அகற்றுதல், இயல்பு வாழ்க்கையைக் கொண்டு வருதல் போன்ற பல கருத்துக்களில் பிரதமருக்கும்,சனாதிபதிக்குமிடையில் கருத்து முரண்பாடுகள் இருக்கின்றது. இது தமிழருக்கு உரிமை வழங்குவதில் சிங்கள இனம் உறுதியாக இல்லை என்பதையே காட்டுகிறது.

குட்டிமணி, தங்கத்துரை ஆகியோர் உட்பட மண்ணுக்காக மரணித்துப் போன மாவீரர்களின் இலட்சியத்தை சிதைக்க முனைந்த சிறிலங்கா அரசாங்கம் இனவெறியர்களின் நோக்கமும் பலியாது இன்று விடுதலைப் போர் பலமிக்க அமைப்பாக எழுந்து வியாபித்து நிற்கிறது. தமிழரின் இலட்சியத்திற்காகக் காவியமாகிய மாவீரர்களின் இலட்சியம் ஈடேறும் என்றும் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான ரவிராஜ்,சந்திரநேரு, இராஜகுகனேஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர்கள் கலந்து கொண்டதுடன் பெரும் திரளான மக்களும் கலந்து கொண்டார்கள். (33)

## இந்திய...

மீனவர்கள் கையாளப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. இந்திய-இலங்கைப் பொருளாதாரங்களை மேம்படுத்தும் விடயத்தைப் பொறுத்த வரையில் இலங்கைக்கு இந்தியா வழங்கியுள்ள 250 மி.அமெரிக்க டொலரின் நீண்டகால கடன்குறித்தும் இருநாடுகளுக்குமிடையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வரிகளற்ற வர்த்தக ஒப்பந்தம் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

இந்திய-இலங்கை அரசுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டுப்பொருளாதார ஆணையகத்தின் கூட்டம் ஆவணி மாதத்தில் கொழும்பில் நடைபெறவுள்ளது பற்றியும்,

நேற்றைய விவாதங்கள் ஒரு விதத்தில் கொழும்பு ஆணையகத்தின் கூட்டத்திற்கான தயாரிப்பாக இருந்தது.

கொழும்புக் கூட்டத்தின்போது வெளியிடப்பட இருக்கும் இந்திய-இலங்கைப் பொருளாதாரகூட்டு ஒப்பந்தம் தயாரிப்பதற்கான வல்லுநர் குழு பற்றியும் விவாதிக்கப்பட்டுள்ளதுஎன்றும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சின் செயலர் பர்வா கூறியுள்ளார்.

## இடைக்கால..

ணைகள் தொடர்பாக பிரதமர் விடுத்த வேண்டுகோளுக்கு சனாதிபதி இணங்கமாட்டார் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் தேசிய பிரச்சினைக் குத் தீர்வு காணக்கூடிய அதே வேளை அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிரந்தரத்தீர்வை ஏற்படுத்தும் நோக்கிலே இடைக்கால நிர்வாக சபை வடக்கு கிழக்கில் ஏற்படுத்தப்படல் வேண்டும் என்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை இடைக்கால நிர்வாகம் தொடர்பாக சனாதிபதிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்ட யோசனை அறிக்கைகளில் பல்வேறு முரண்பாடுகள் காணப்படுகின்றதென பொதுசன ஐக்கிய முன்னணியும் தெரிவித்துள்ளது.

கடந்த 17ஆம் திகதி விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட யோசனைகளில் 5 பந்திகளிலான முரண்பாடுகள் இருப்பதாக பொதுசன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

அதேவேளை கடந்த 18ஆம் திகதி சனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட யோசனை அறிக்கையில் முகவுரை இருக்கவில்லை என்றும் அவர் இன்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் சுட்டிக்காட்டினார்.

வடக்கு கிழக்கின் பாதுகாப்பு, காணி, வருமானம், பொலிஸ் ஆகியவற்றின் அதிகாரங்கள் தொடர்பாக சனாதிபதிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் முரண்பட்ட வகையில் அறிவிக்கப்பட்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

தற்போது தேசிய பிரச்சினைகள் தொடர்பாக தீவிரகவனம் செலுத்தப்பட்டுள்ள நிலையில் இத்தகைய முரண்பாடுகளைத் தோற்றுவிக்கக்கூடிய விடயங்கள் கவலையளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.


# தேவை

கிளிநொச்சியில் இயங்கும் நிறுவனமொன்றிற்கு பின்வரும் பணிகளுக்கு ஆட்கள் தேவை.

**அலுவலக உதவியாளர்**

**பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்**

கிளிநொச்சிப் பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 30 – 07 – 2003 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு ஜெயந்தி நகரில் உள்ள ஈழநாதம் பணிமனைக்கு வருகை தருமாறு வேண்டப் படுகின்றனர்.

(இ)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூலை மாதம் 26ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.